உ

சிவமயம்.

சங்கமருவியசான்றோரி லொருவராகிய
பெருவாயின்முள்ளியாரா
லருளிச்செய்யப்பட்ட,

# ஆசாரக்கோவைமூலமும்

மதுரை ஆசிரியராகியபாரத்துவாசி
நச்சினார்க்கினியரால்
அருளிச்செய்யப்பட்ட வுரையும்,
சிவக்கியானபோதவசனமும்

இயற்றமிழாசிரியராகிய
திருத்தணிகை
விசாகப்பெருமாளையரவர்கள்
முன்னிலையில்
தில்லையம்பூர்ச்
சந்திரசேகரகவிராஜபண்டிதரால்
பரிசோதிக்கப்பட்டு,
திருநெல்வேலிநெல்லையம்பலங் கல்விச்சங்கத்துச்
சைவசமயசபாப்பிரசங்கத்தலைமைப்புலவரும்
சைவசமயபரிபாலகருமாகிய
சதுரங்கபட்டணம்
சதாசிவமுதலியாரவர்கள்
முயற்சியால்
புதுவைமாநகரம்
பெரியசாமிமுதலியாரவர்களாலும்
பெங்களூர்
ஆ-நமச்சிவாயமுதலியாரவர்களாலும்
இலட்சுமீவிலாசஅச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டன.
சாலிவாகனசகாப்தம்-௲எ௱கூ-நளஹூ-ஐப்பசிமீ.

உ



திருவாரூரில் சிவநேசச் செல்வராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவனடியார்களைவணங்கி யடிமைத்திறம்பாடும்படி தமக்குப் பரமசிவன் கட்டளையிட் டருளியவுடனே திருத்தொண்டத்தொகைத்தேவாரம் திருவாய்மலர்ந் திருப்பதையும் வெற்றவேயடியாரடியிசைவிழும் விருப்பினனென்பதையும் அடியாருறவு மரன்பூசைநேசமும் அன்புமன்றிப் படிமீதில்வேறுபயனுளதோ வென்பதையும் சிந்தித்துணர்ந்துயாவரும்பணியக்கடவர்கள்.

என்தன்புடைய சைவசமயத்தவர்களே - யான்சொல்வதல்ல-திருநெறித் தமிழ்வேதவாக்கியங்களைசிந்தியுங்கள்- ஒழுக்கம்விழுப்பந் தரலா லொழுக்க முயிரினுமோம்பப்படும்- நன்றிக்கு வித்தாகுநல் லொழுக்கந்தீயொழுக்க மென்றுமிடும்பைதரும்- அரகராவென்னுமூடர்-திருவெண்ணீறிடாமூடர்-அடிகள்பூசியாமூடர் - அறிவுநூல்கல்லாமூடர்-நெறியிலேநில்லாமூடர்-அறம்விஜாரியாமூடர்- நரகேழிற்புரளவீசுமென்றும் திருப்புகழில்சொல்லியிருக்கின்றது.

வந்திக்கண்டாயடியாரைக்கண்டால்மறவாமல்நெஞ்ச-சிந்திக்கண்டாயரன் செம்பொற்கழறிகழ் மாமருதிற் - சந்திக்கண்டாயில்லையாகினமன்றமர் தாங்கொடுபோ - யுந்திக்கண்டாய் நிரயத்துன்னைவிழ்த்திபுழக்குவரோ

அருள்மிகுத்த ஆகமநூல் படித்தறியார் கேள்வியினுமறியார் முன்னம், இருவினையின்பயனறியார் குருக்களென்றேயுபதேசமெவர்க்குஞ்செய்வார், வரமிகுத்ததண்டலைநீணெறியாரேயவர்திரியுமார்க்கமெல்லாங், குருடனுக்குக்குருடன்கோல் கொடுத்துவழிகாட்டுகின்றகொள்கைதானே .................................................... *

வையமோங்குக வான்மழைமன்னுக, மெய்விரும்பிய அன்பர்விளங்குக, சைவநன்னெறி தான்தழைத்தோங்குக, தெய்வவெண்டிரு நீருசிறக்கவே.......... ...................................................... *

திருநெறித்தமிழ்வேதசொரூபராகியஎனதாண்டவர்
நெல்லையப்பர் காந்திமதியம்மன்திருவடிகளேசரணம்.

சிவமயம்

# ஆசாரக்கோவை

## மூலமும்- உரையும்

ஆரெயின்மூன்று மழித்தானடியேத்தி, யாரிடத்துந்தான
றிந்த மாத்திரையா னாசாரம், யாரு மறிவதறமாக மற்றவற்
றை,யாசாரக்கோவையெனத்தொகுத்தான் றீராத், திருவாயி
லாயதிறல்வண்கயத்தூர்ப், பெருவாயின் முள்ளியென்பான்.

(இதன்பொருள்)[பகைவரானழித்தற்கரியமும்மதிலையும்நகைத்தழித்தமுதல்வனடியைத்துதித்து]இருடிகள் சொல்லியநூல்களில் தானறிந்தவளவினானேயெல்லாருமறியஅறனாயுள்ள ஆசாரமாகிய மற்றவற்றை ஆசாரக்கோவையெனச்செய்துதிரட்டினான், நீங்காத திருமடந்தைக்குவாயிலாகியதிறலையுடைய வண்கயத்தூர்ப்பெருவாயின்மகனாகியமுள்ளியென்னும்பெயரையுடையான்-எ-று(க)

நன்றியறிதல் பொறையுடைமை யின்சொல்லோ, டின்னாத
வெவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ, டொப்புரவாற்ற
வறிதலறிவுடைமை, நல்லினத்தா ரோடு நட்ட லிவையெட்டு
ஞ், சொல்லியவாசாரவித்து. *

(இ-ள்)தனக்குப்பிறர்செய்தநன்றியறிதலும், பொறையும், இன்சொல்லும், எல்லாவுயிர்க்குமின்னாதனசெய்யாமையும், கல்வியும் ஒப்புரவை மிகவறிதலும், அறிவுடைமையும், நல்லினத்தாரோடு நட்டலுமெனஇவ்வெட்டுவகையும்நல்லாராற்சொல்லப்பட்டஆசாரங்கட்குக்காரணம் எ-று (உ)

பிறப்புநெடுவாழ்க்கை செல்வம் வனப்பு, நிலக்கிழமை மீக்
கூற்றங்கல்விநோயின்மை, யிலக்கணத்தா லிவ்வெட்டு மெய்
துபவென்று, மொழுக்கம்பிழையாதவர். *

(இ-ள்) நற்குடிப்பிறப்பு, நெடியவாணாள், செல்வம், அழகுடைமை, நிலத்துக்குரிமை, சொற்செலவு, கல்வி, நோயின்மையென்றுசொல்லப்பட்டஇவ்வெட்டினைஇலக்கணத்தோடுநிரம்பப்பெறுவர்- என்றுமாசாரந்தப்பாமலொழுகுவார் எ-று (௫).

தக்கணைவேள்விதவங்கல்வியிந்நான்கு,† முப்பாலொழுக்கி
னாற்காத்துய்க்க, வுய்க்காக்கா, லெப்பாலுமாகாகெடும். *

(இ-ள்) குரவர்க்குத்தக்கணைகொடுத்தலும், யாகம்பண்ணுதலும், தவஞ்செய்தலும், கல்வியுமென இந்நான்கினையுமூன்றுவகைப்பட்டவிதியாலே பாதுகாத்துநடாத்துக- நடாத்தாக்கால் எவ்வுலகத்தின்கண்ணும் தனக்குப்பயனாகாவாயிந்நான்குங்கெடும் எ-று

வைகறையாமந்துயிலெழுந்து தான்செய்யு, நல்லறமுமொ
ண்பொருளுஞ்சிந்தித்துவாய்வதிற், றந்தையுந்தாயுந்தொழு
தெழுகவென்பதே, முந்தையோர்கண்டமுறை. *

(இ-ள்)வைகறையாகிய பின்யாமத்திலேதுயிலெழுந்து, தான்பிற்றைஞான்றுசெய்யும், நல்லறத்தையும், ஒள்ளியபொருட்குவருவாயாகியகாரியத்தையுமாராய்ந்து சிந்தித்துப் பின்னைக் கங்குல்புலர்ந்தாற் பழுதின்றித் தந்தையையும், தாயையும், தொழுதெழுந்து ஒருகாரியத்தைச்செய்யத்தொடங்கவென்றுசொல்லப் படும், ஒழுக்கம், அறிவுடையபழையார்சொல்லியமுறைமை எ-று (௬

எச்சிலார் தீண்டார் பசுப் பார்ப்பார்தீத்தேவ, ருச்சந்தலை
யோடிவையென்பயாவருந், திட்பத்தாற்றீண்டாப்பொருள். *

(இ-ள்)பசுப்பார்ப்பார் தீத்தேவருச்சந்தலையோடே கூடவிவையிற்றையெச்சிலையுடையராயாவருந்தீண்டாரென்று சொல்லுவர் எல்லாரும்யாப்புறவெச்சிலோடுதீண்டப்படாதபொருளுமிவை- எ-று(

எச்சிலார்நோக்கார்புலை திங்களுயிறு நாய், தக்கவிழ்மீனொ
டிவ்வைந்துந், தெற்றென, நன்கறிவார் நாளும்வைந்து. *

(இ-ள் புலையும், திங்களும், ஞாயிறும், நாயும், அழகியவீழ்மீனொடுசொல்லப்பட்டஐந்தினையும்எச்சிலையுடையார்விரைந்துதெளியநாளுங்கண்ணால்நோக்கார்நன்கறிவார்- எ-று (௭)

எச்சில்பலவுமுளமற்றவற்று, ளியக்கமிரண்டு மிணைவிழைச்
சுவாயில், விழைச்சிவையெச்சிலிந்நான்கு. *

---

† முப்பாலொழுக்கம்- அறநூல்விதி, பொருணூல்விதி, இன்பநூல்விதி;

(இ-ள்) எச்சில்கள்பலவெச்சில்களுமுளவவற்றுள் மலமூத்திரங்க
ளியங்கியவியக்கமிரண்டொடுகூட *இணைவிழைச்சு †வாயினால்வ
ழங்கியவிழைச்சுமென விவையெச்சிலாவன இவ்வெச்சில்நான்கி
னையும்பாதுகாக்க எ-று (அ)

நால்வகையெச்சிலுநன்குகடைப்பிடித், தோதாருரையார்
வளராரேயெஞ்ஞான்று, மேதைகளாகுறுவார். *

(இ-ள்) கூறப்பட்ட இந்நான்குஎச்சிலையுமிகக்கடைப்பிடித்தொ
ன்றனையுமோதார் வாயாலொன்றனைச்சொல்லார்கண்டுயிலாரெஞ்
ஞான்றுமதியுடையராகவேண்டுவார் எ-று (௯)

நாளந்திகோறின்று கண்கழீஇத் தெய்வத்தைத், தானறியு
மாற்றாற்றொழுதெழுக வல்கந்தி, நின்றுதொழுதல்பழி. *

(இ-ள்) சிறுகாலையின் கண்ணொருகோலாலே பற்றுடைத்துக்கண்
கழுவிற்முன்வணங்குந் தெய்வத்தைத்தானறியு நெறியாற்றொழுக
பின்பொருகருமத்தைத்தொடங்குக மாலைப் பொழுதின்கட்டா
ன்வணங்குந்தெய்வத்தைநின்றுதொழுதல்குற்றமாம் இருந்துதொ
ழுக எ-று (௰)

தேவர்வழிபாடுதீக்கனாவாலாமை, யுண்டதுகான்றன்மயிர்க
ளைதலூண்பொழுது, வைகுதுயிலோடிணைவிழைச்சுக் கீழ்ம
க்கண், மெய்யுறலேனை மயலுறலீரைந்து, மையுறாதாடுகநீர் *

(இ-ள்) தன்னால்வணங்கப்படும் தேவரை வழிபடுதற்கண்ணும், தீ
க்கனாக்கண்டவிடத்தும், தூய்மையின்மையுண்டாயினவிடத்தும்
உண்டதனைக்கான்றவிடத்தும், மயிர்களைந்தவிடத்தும், உண்ணும்
பொழுதும், பொழுதேற உறங்கியவிடத்தும், இணைவிழைச்சுண்
டாயினவிடத்தும் கீழ்மக்களுடம்பு தீண்டியவிடத்தும், மூத்திர
○புரீடங்கால்வாலுறவிடத்தும், எனவிப்பத்திடத்தும்ஐயுறாதே
நீராடுக- எ-று (௰௧)

உடுத்தலானீராடாரொன்றுடுத்துண்ணா, ருடுத்தாடைநீருட்
பிழியார், விழுத்தக்கா, ரொன்றுடுத் தென்றுமவைபுகாரெ
ன்பதே, முந்தையோர்கண்டமுறை. *

(இ-ள்) ஒன்றனையுடுத்தல்லதுநீராடார்- இரண்டுடுத்தன்றியொன்
றுடுத்துண்ணார்- உடுத்தவாடையைநீரின்கட்பிழியார்- சீர்மைநக்
காரோர்ராடையையுடுத் தவையின்கட்செல்லாரென்றுசொல்லப்
படுவதுபழையார்கண்டமுறைமை எ-று (௰௨)

---

*இணைவிழைச்சு- புணர்ச்சி †வாயில்விழைச்சு- எச்சில்

○ புரீடம் -மலம்.

தலையுரைத்தவெண்ணெயாலெவ்வுறுப்புந் தீண்டார், பிறரு
டுத்தமாசுணியுந்தீண்டார்; செருப்புக், குறையெனினுங்
கொள்ளாரிரந்து. *

(இ-ள்) தலையின்கட் டேய்த்தஎண்ணெயால்யாதோ ருறுப்புந் தீண்டார்-பிறருடுத்தஅழுக்காடையுந்தீண்டார்- பிறர்தொட்டசெருப்பும்பிறரிரந்துதமக்குக்காரிய மென்று வேண்டிக்கொள்ளினுங் கொள்ளார் எ-று (௰௩)

நீருண்ணிழற்புரிந்துநோக்கார் நிலமிராக், கீறாரிராமரமுஞ்
சேராரிடரெனினு, நீர்தொடாதெண்ணெ யுரையாருரைத்
தபி, னீர்தொடார்நோக்கார்புலை. *

(இ-ள்) நீரின்கட்டந்நிழலை விரும்பிநோக்கார்- நிலத்தையிருந்து கீறார்-இரவின்கண்ணொருமரத்தின்கண்ணுஞ்சேரார் - நோய் கொண்டிடர்ப்பட்டாராயினும் நீரைத்தொடாதே யெண்ணெயுடம்பின்கட்டேயார்அவ்வெண்ணெய்தேய்த்தபின் றம்முடம்பின்மேல் நீரைத்தெளித்துக்கொள்ளாதுபுலையைத்தன்கண்ணானோக்கார் எ-று

நீராடும்போழ்தினெறிப்பட்டாரொஞ்ஞான்று, நீந்தாருமி
யார்திளையார் விளையாடார், காய்ந்ததெனினுந் தலையொழிந்
தாடாரே, யாய்ந்தவறிவினவர். *

(இ-ள்) ஒருமுறைப்பட்டார் நீராடும்போழ்தின்கண்ணொருநாளும் நீந்தார்நீரின்கண்ணுமிபார்-நீரைக் தடைந்துதிளையார்- விளையாடுவதுஞ்செய்யார்- எண்ணெய்ப்பெறாதுதலைகாய்ந்த தெனினுந் தலையொழியநீராடார்- ஆய்ந்தஅறிவினர் எ-று (௰௫)

ஐம்பூதம்பார்ப்பார்பசுத்திங்கஞாயிறு,தம்பூதமெண்ணாதிகழ்
வானேற், றன்மெய்க்க, ணைம்பூதமன்றேகெடும். *

(இ-ள்) நில்முதலாயினஐம்பூதங்களையும், பார்ப்பாரையும், பசுக்களையும்,திங்களையும்,ஞாயிற்றையும், தன்னுடம்பு போலக்கருதிப் போற்றாதிகழ்வானாயின். தன்னுடம்பின்கணுள்ள ஐந்து பூதத்தையுமுடையதெய்வங்கள்அன்றேகெட்டகன்றுபோம் எ-று (௰௬)

அரசனுவாத்தியான் றாய்தந்தைதம்மு, னிகரில்குரவரிவ்வைவ
ரைத்,தேவரைப்போலத்தொழுதெழுகவென்பதே,யாவருங்
கண்டநெறி. *

(இ-ள்) அரசனும், உவாத்தியும், தாயும்; தந்தையும், தனக்குமூத்தோனுமெனவிவர்கள்தமக்குநிகரில்லாதகுரவராவார், இவர்களை

த்தேவரைப்போலத் தொழுதெழுகவென்று சொல்லப்படுவதெல்லாநல்லாருமுரைத்துச்சொல்லியநெறி. எ - று (௧௭)

குரவருரையிகந்துசெய்யார்விரதங், குறையுடையார்தீரமறவார், நிறையுவா, மேற்கோளுந்தின்னார் மரங்குறையாரென்பதே, நல்லறிவாளர் துணிவு. *

(இ - ள்) முன்புகூறப்பட்டகுரவர்கள் சொல்லியசொல்லைக்கடந்தொன்றனையுஞ்செய்யார். முடியாதகிடந்த குறைவிரதமுடையார் மிகவதனைமறந்தொழுகார். மதிநிறைந்தவுவாவின்கண் தம்பற்றுடைப்பதுஞ்செய்யார். அவ்வுவாவின்கண்மரங்களையுங்குறையாரென்றுசொல்லப்படுவதுநல்லறிவாளர்தொழில். எ-று (௧௮)

நீராடிக்கால்கழுவிவாய்பூசி மண்டலஞ்செய், துண்டாரேயுண்டாரெனப்படுவ, ரல்லாதா, ருண்டார்போல்வாய்பூசிச்செல்வரதுவெடுத்துக், கொண்டாரரக்கர்குறித்து. *

(இ ள்) குளித்துக்கால்கழுவிவாய்பூசி, உண்ணுமிடமண்டலஞ்செய்துஉண்டாருண்டாராவர். இப்படியொழியவுடைவர்கள்உண்டாரைப்போலவாய்பூசிப்போவாரூணைஅரக்கரெடுத்துக்கொண்டார். எ-று(

காலினீர்நீங்காமை யுண்டிடுகபள்ளியு, மீரம்புலராமையேறற்கவென்பதே, பேரறிவாளர் துணிவு. *

(இ - ள்) கால்கழுவிநீருலருவதற்குமுன்னேயுண்ணத்தொடங்குக. பாயலின்கண்ணுங் கால்கழுவியவீரம்புலர்ந்தாலன்றியேறுதொழிகவென்றுசொல்லப்படுவதுபேரறிவாளர்துணிவு. எ-று (௨௰)

உண்ணுங்கானோக்குந்திசைகிழக்குக்கண்ணமர்ந்து, தூங்கான் றுளங்காமை நன்கிரீஇ, யாண்டும்,பிறிதியாது நோக்கானுரையான்றொழுதுகொண், டுண்கவுகாஅமை நன்கு *

(இ-ள்) உண்ணும்போதுநோக்கப்படுந்திசை கீழ்த்திசையாங்கண்பொருந்தி தூங்காதுபுடைபெயராதுநன்றாகவிருந்து எவ்விடத்தும்பிறி தொன்றனைநினையாது நோக்காது சொல்லாது உண்கின்றவுணவினைத்தொழுதுசிந்தாமலுண்க. எ -று (௨௧)

விருந்தினர் மூத்தோர் பசுசிறைபிள்ளை, யிவர்க்கூண்கொடுத்தல்லாலுண்ணாரேயென்று,மொழுக்கம்பிழையாதவர். *

(இ-ள்) விருந்தினரும், மிகமூத்தோரும், பசுக்களும், சிறைகளு ம்,பிள்ளைகளுமென்று சொல்லப்பட்ட இவர்கட்கு உணவுகொடு த்தல்லது உண்ணார். என்றும் ஒழுக்கம்பிழையாதரர். எ-று (உ௨)

ஒழிந்ததிசையும்வழிமுறையானல்ல முகட்டுவழியூண்புகழ்
ந்தாரிகழ்ந்தார், முகட்டுவழிகட்டிற்பாடு. *

(இ-ள்) முன்சொன்னகீழைத்திசையும் அக்கீழைத்திசைக் கிடை யூறுளதாயின்பின்னை நோக்கியுண்டற்குநல்லவாம். வாயினேரிருந் துண்டலையாமெனப் புகழ்ந்தார்கள்.முகட்டினேர் கட்டிலிட்டுக்கி டக்கலாகாதென் றுபழித்தார்கள்நல்லர். எ-று. (உ௩)

கிடந்துண்ணார் நின்றுண்ணார் வெள்ளிடையுமுண்ணார், சிறந்
துமிகவுண்ணார் கட்டின்மேலுண்ணா, ரிறந்தொன்றுந்தின்ன
ற்கநின்று- *

(இ-ள்) கிடந்துண்ணலாகாது. நின்றுண்ணலாகாது. வெள்ளிடை யின்கண்ணிருந்துண்ணலாகாது.விரும்பிமிகவுமுண்ணலாகாது. க ட்டின்மேலிருந்துண்ண லாகாது.நெறியைக்கடந்துமிக யாதொ ன்றுநின்றுதின்னலாகாது. எ-று. (உ௪)

மூன்றுவ்வார்முன்னெழார் மிக்குமுருணின்க, ணென்பெறி
னுமாற்றவலமிரார்,தம்மிற்பெரியார்தம்பாவிருந்தக்கால் *

(இ-ள்) தம்மிற்பெரியார் தம்பந்தியிலிருந்துண்ணுமிடத்து அப் பெரியாருண்பதற்குமுன்னேதாமுண்ணார். முந்துறவெழுந்திரா ர்.அவர்களைநெருக்கியிரார். உண்ணுமிடத்து மிகயாதானும்பெறி னும்வலமிருந்துண்ணற்க. எ-று மீக்கூமுமொன்னின்சொற்செல வுசெய்யாமென்றுமாம்- (உ௫)

கைப்பனவெல்லாங் கடைதலைதித்திப்ப, மெச்சும் வகையா
லொழிந்தவிடையாகத்,துய்க்கமுறைவகையாலூண் *

(இ-ள்) கைக்குங்கறியெல்லாமுடிவின்கண்ணுகவும், தித்திக்குங் கறியெல்லாமுதலாகவும், ஒழிந்தசுவைகளுள்ள கறிகளெல்லாம் இடையாகவுமுண்க.புகழும்வகையான்-எ-று (உ௬)

மூதியவரைப்பக்கத்துவையார்விதிமுறையா, லுண்பவற்று
ளெல்லாஞ்சிறியகடைப்பிடித், தன்பிற்றிரியாமை யாசாரநீ
ங்காமை,பண்பினுனீக்கல்கலம்- *

(இ-ள்) தம்மின்மூத்தாருண்ணும் பொழுது அம்மூத்தாரைத்த ம்பக்கத்துவைத்துண்ணார். முறைமையாலுண் ணுங்கலங்களெல்லா வற்றுள்ளுஞ்சிறியகலங்களைக்கடைப் பிடித்துத்தனக்குக்கைக்கொ ண்டு, காதலிற்பிறழாதவகையும் ஒழுக்கத்தினீங்காத வகையுமுண்

டுவேறாவோடுகூட உண்டமைந்தால் உள்ளகலங்களைமுறைபடநீக்குக. எ - று (௨௭)

இழியாமைநன்குமிழ்ந்தெச்சிலறவா, யடியோடுநன்குதுடைத்து. வடிவுடைத்தா, முக்காற்குடித்துத்துடைத்துமுகத்துறுப், பொத்தவகையால்விரலூறுத்துவாய்பூசன், மிக்கவர்கண்டநெறி. *

(இ-ள்) வாயிற்புக்கநீருட்புகாமைமிகவுமுமிழ்ந்து, எச்சிலறும்படி வாயையும் அடியையுமிகத்துடைத்து, அழகுடைத்தாக முக்காற்குடித்துத் துடைத்து, முகத்திலுள்ள உறுப்புகளை அவற்றுக்குட்பொருந்தும் வகையால்விரல்களையுறுத்திஅப்பெற்றியனேபூசும்பூச்சுநெறிமிக்கவர்கண்டநெறி. எ - று (௨௮)

இருகையாற்றண்ணீர்பருகாரொருகையார், கொள்ளார்கொடாஅர் குரவர்க்கிருகை, சொறியாருடம்புமடுத்து. *

(இ - ள்) இருகையானுமுகந்தும் ஏற்றுந்தண்ணீர் குடியார், குரவர்கொடுப்பனவற்றை ஒருகையால்வாங்கிக்கொள்ளார், அவர்க்குத் தாமொருகையாற் கொடார், உடம்பினை மடுத்து இருகையாற் சொறியார் (எ - று) (௨௯)

அந்திப்பொழுது கிடவார்நடவாரே, யுண்ணார் வெகுளார்விளக்கிகழார்முன்னந்தி,யல்குண்டடங்கலவழி. *

(இ - ள்) மாலைப்பொழுதின்கண்கிடத்தலும்வழிநடத்தலுஞ்செய்யார், ஒருவரைச்சீறுவதுஞ்செய்யார், அந்திப்பொழுதுவிளக்கிகழாதேற்றுவார், மாலைப்பொழுதின்கண்ணுண்ணாது அல்கலின்கண்ணுண்டுபுறம்போகாதுஓரிடத்தின்கண்ணேயடங்குதல்நெறி ( )

கிடக்குங்காற்கைகூப்பித்தெய்வந்தொழுது,வடக்கொடுகோணந்தலைசெய்யார்மீக்கோ, ளுடற்கொடுத்துச் சேர்தல்வழி

(இ - ள்) கிடக்கும்பொழுது தெய்வத்தைத் கைகூட்பித்தொழுது வடதிசையின் கண்ணுங்கோணத்திசையின்கண்ணுந்தலைவையாது மேற்போர்வை தொன்றினையுடம் பின்கட் கொடுத்துக்கிடத்தல் நெறி. எ - று (௩௧)

இருதேவர்பார்ப்பாரிடைபோகார் தும்மினு, மிக்கார்வழுத்தித்தொழுதெழுக, வொப்பார்க்குடன்செல்லலுள்ளமுவந்து *

(இ - ள்) இருதேவர்நடுவும் பார்ப்பார்பலர்நடுவும் ஊடறுத்துப் போகார் தும்மினபொழுது மிக்கார்வழுத்தினாற்றொழுதெழுக தம்மோடொப்பார்க்குவழிபோம்போதுடனே நேர்செல்க தம்முள்ளமுவந்து எ - று (௩௨)

புற்பைங்கூழாப்பிசுடலைவழிதீர்த்தந், தேவகுலநிழலானிலை
வெண்பலியென், றீரைந்தின்கண்ணு முமிழ்ந்தோடிருபுல
னுஞ்,சோரா ருணர்வுடையார். *

(இ - ள்) புல்லின் கண்ணும், விளை நிலத்தின் கண்ணும், ஆப்பியின்கண்ணும், சுடலையின் கண்ணும், வழியின் கண்ணும், தீர்த்தத்தின்கண்ணும், தேவர்கோட்டத்தின்கண்ணும், நிழலின் கண்ணும், ஆநினை நிற்குமிடத்தின் கண்ணும், சாம்பலின் கண்ணு மெனவீரைந்தின்கண்ணும் உமிநீரையும், மூத்திரபுரீடங்களையுஞ்சோராருணர்வுடையோர் எ - று (௫௩)

பகற்றெற்குநோக்காரிராவடக்குநோக்கார், பகற்பெய்யார்
தீயினுணீர் *

(இ - ள்) பகற்றெற்குநோக்கியும், இராவடக்குநோக்கியுமிருந்து மூத்திரபுரீடங்களைச்சோரார், பகற்பொழுதின் கட்டீயுணுணீர் பெய்யார் - எ - று (௫௪)

பத்துத்திசையுமனத்தான்மறைத்தபி, னந்தரத்தல்லாலுமி
ழ்வோடிருபுலனு, மிந்திரதானம் பெறினுமிகழாரே, தந்தி
ரத்துவாழ்துமென்பார். *

(இ - ள்) திசைபத்தினையுமறைத்தாராகமனத்தாற்கருதிப்பத்துத்திசையின்கண்ணுமின்றியிலே, வேறோரிடத்தின்கண்மேன சோர்கின்றாராகக்கருதியல்லது உமிநீரையும்,மூத்திரபுரீடங்களையும், இந்திரனுறையுமிடம்பெற்றாராயினும், சோரார்நூன்முறையானொழுகுதுமென்பார் எ - று (௫௫)

நடைவரவுநீர்கத்து நின்றுவாய்பூசார்; வடிநிலைநீருள்ளும்
பூசார்,மனத்தாற், வளைந்துகொண்டல்லதுபூசார்கலத்தினு
ற்,பெய்பூச்சுச்சிராதெனின். *

(இ - ள்) நீரகத்தின்கணின்றும்நடவாநின்றுந்தம்வாய்பூசார், ஓடுநீர்பெற்றிலாராயின்நிலைநீருள்ளும் அப்பெற்றிபூசார், அந்நீரருந்தும்போதும், பூசும்போதும் மனத்தான்வளையவுறத்துக்கொண்டல்லதுபூசார், அதுவுஞ்செய்வது, கலத்தான்முகந்துசிலர் பெய்யப்பூசமுடியாதாயின் எ - று (௫௬)

சுடரிடைப்போகார்சுவர்மேலுமியா, ரிடரெனினுமாசுணிகீ
ழ்தம்மேற்சொள்ளார், படைவரினுமாடைவளியுளைப்பப்
போகார், பலரிடையாடையுதிராரே யென்றுங், கடனறிகா
ட்சியவர் *

(இ - ள்) ஒருவற்கும்விளக்கிற்கும், நடுவூடறுத்துப்போகார், சுவரின்மேலுமியார்,தமக்குக்குளிரானிடர்வரினும், பிறருடுத்தமா

ணியைத்தங்கீழ்ப்படுப்பதும், மேற்போர்ப்பதுஞ் செய்துகொள்ளார். புடைவந்ததாயினும், தாமுடுத்த ஆடைக்காற்றுப்பிறர்மேலுறைப்பப்போகார். பலர்நடுவணின்றுடையையுதறுதலுஞ் ஞான்றுங்கடைப்பாட்டையறிந்த அறிவுடையார். எ-று (௩௭)

பிறர்மனைகட்களவுசூது கொலையோ, டறனறிந்தாரிவ்வைந்
துநோக்கார், திறனிலரென், றெள்ளப்படுவதூஉமன்றிநிர
யத்துச்,செல்வழியுய்த்திடுதலால். *

(இ - ள்) பிறர்மனையாளும், கள்ளும், களவும், சூதும், கொலையுமென்றிவ்வைந்தினையும், அறனறிந்தார்செய்வேமென்றகருதார் கருதுவாராயின்,திறப்பாடிலரென்றுபலராலிகழப்படுதலுமன்றியேநரகத்தின்கண்செல்லுநெறியிலிவைசெலுத்துதலான்- எ-று

பொய்குறளைவெளவலழுக்காறிவைநான்கு, மையந்தீர்காட்
சியார்சிந்தியார், சிந்திப்பி,னையம்புகுவித்தருநிரயத்துய்த்
திடுந், தெய்வமுஞ்செற்றுவிடும். *

(இ - ள்) பொய்யும், குறளையும், பிறர்பொருளைத்தாம்வவ்வவேண்டுங்காதலும், பிறராக்கத்தின்கட்பொறாமையும், எனவிவைநான்கினையும், ஐயந்தீர்த்தஅறிவினையுடையார் நினையார். நினைப்பாராயின்பிச்சைபுகுவித்துநரகத்தின்கண்ணேயும் புகுவிக்கும் தெய்வமுங்கெடுத்துவிடும். எ - று (௩௯)

தமக்கென்றுலையேற்றார் தம்பொருட்டுண்கொல்லா, ரடுக்க
லையெச்சிற்படா அர், மனைப்பலி,யூட்டினமைகண்டுண்கவூண்.

(இ - ள்)தமக்கென்றுலையேற்றார். தெய்வப்பொருட்டன்றித்தங்காரணத்தாற்கொன்றுணக்கொள்ளார். அட்டிலின்கணெச்சிற்படுத்தார், மனையுறைதெய்வங்கட்குப்பலியூட்டினமையறிந்தபின்னைத்தாருண்க. எ - று (௪௰)

உயர்ந்ததின்மேலிராருள்ளழிவுசெய்யா, ரிறந்தின்னுசெய்த
க்கடைத்தும், குரவ, ரிளங்கிளைகுற்றமுடித்து. *

(இ - ள்) தமக்கிளையசுற்றத்தாருங்குற்றமுடித்துக்குரவராயினுமுயர்ந்ததின்மேலிரார். இளங்கிளைகள்மனமழிவனவற்றைப்புஞ்செய்யார். முறைமைகடந்து மற்றவ்விளங்கிளைகளின்னாதசெய்தகாலத்தும். எ - று (௪௧)

கண்ணெச்சில்கண்ணூட்டார்காலொடுகாறேயார், புண்ணிய
மாயதலையோடுறப்புறத்த, நுண்ணியநூலறிவினர் *

(இ - ள்) ஒருவன்றன்கண்ணிற்குமருந்தெழுதியகோல்கொண்டவெச்சில் கழியாதுதங்கண்ணிற்கம்மருந்தூட்டார்.தங்காலொடுகால்

தேயார். புண்ணியமாயபொருள்களைத்தந்தலையின்கண்ணும், மற்றையுறுப்பின்கண்ணுமுறுத்துக. நுண்ணியநூலையுணர்வார் எ-று

தீண்டாநாண்முந்நாளுநோக்கார்நீராடியபி,னீராறுநாளுமி
கவற்கவென்பதே, பேரறிவாளர்துணிவு. *

(இ-ள்) தம்மனைவியர்க்குப்பூப்புநிகழ்ந்தால், மெய்யுறலாகாத நாள்மூன்றின்கண்ணும் அவரைநோக்கார். நீராடியபின்புபன்னிரண்டுநாளும் அகலாதொழிகவென்றுசொல்லப்படுவதுபேரறிவாளர்துணிவு. எ-று (௪௩)

உச்சியம்போழ்தோடிடையாமமீரந்தி, மிக்கவிருதேவர்நா
ளோடுவாத்திதிநா, ளட்டமியுமேனைப்பிறந்தநாளிவ்வனைத்
து, மொட்டாருடனுறைவின்கண். *

(இ-ள்) உச்சியம்பொழுதும், நடுக்கங்குலும், மாலையும், காலையும், மிக்கஇருதேவர்நாளாகிய ஆதிரையும், ஓணமும், உவாவும், அட்டமியும், தாம்பிறந்தநாளுமென இந்நாட்களின்கண் தம்மனைவியரோடுடனுறைவின்கண்நல்லாருடன்படார். எ-று (௪௪)

நாழிமணைமேலிரியார்மணைகவிழார், கோடிகடையுள்விரியா
ர்கடைத்தலை, யோராதுகட்டிற்படா ரறியாதார், தந்தலைக்க
ணில்லாவிடல். *

(இ-ள்) நாழியைமணைமேலிருத்தார். மணையைக்கவிழ்த்திவையார். புத்தாடையைத்தலைக்கடையின்கண்விரியார். பலரும்புகுதுங்கடைத்தலைக்கண்ணாராயாதுகட்டில்படார். தம்மையறியாதார்முன்புநில்லாதுவிடுக. எ-று. அல்லதூஉந்தம்மையறியாதார்கடைக்கணில்லாதுவிடுகவெனினுமாம். (௪௫)

துடைப்பந்துகட்காடுபுல்லிதழ்ச்செத்தற், கருங்கலங்கட்டில்
கிழிந்ததனோடைந்தும், பரப்பற்கபந்தரகத்து *

(இ-ள்) *துராலசிக்குந்துடைப்பமும், துகளோடுகூடியதுராலும், பூவின்புறவிதழும், பழங்கருங்கலங்களும், கிழிந்தகட்டிலுமென இவ்வைந்தும், மணப்பந்தரின்கீழ்பரப்பாதொழிக. எ-று (௪௬)

காட்டுக்களைந்துகலங்கழீஇ யில்லத்தை, யாப்பிநீரெங்குந்
தெளித்துச்சிறுகாலை, நீர்ச்சால்கரகநிறையமலரணிந், தில்ல
ம்பொலியவடுப்பினுட்டீப்பெய்க, நல்லதுறல்வேண்டுவார் *

(இ-ள்) சிறுகாலையேதுயிலெழுந்து, இல்லத்துள்ளதுராலைக்களைந்து, கருங்கலங்களைக்கழுவித், தம்மனை †ஆப்பிநீராலே யெங்குந்தெளித்து, நீர்ச்சாலையுங்கரகத்தையுநிறையமலரணிந்து இல்லத்தும்

---

*துரால். செத்தை †ஆப்பி. சாணம்

பொலியும்படி யடுப்பினுள்தீயுண்டாக்குக, நல்லசெல்வத்தையுறல் வேண்டுவார். எ - று (௪௭)

அட்டமியுமேனையுவாவும்பதினான்கு, மப்பூமிகாப்பார்க்கு
றுகண்ணு, மிக்க,நிலத்துளக்குவிண்ணதிர்ப்புவாலாமைபார்
ப்பா,ரிலங்குநூலோதாதநாள். *

(இ-ள்) அட்டமிநாளும், உவாநாளும், பதினான்கும், தாமுறையும் பூமிகாக்குமரசற்குறுகணுள்ளநாளும், மிக்கநிலத்துளக்குள்ளநாளும், விண்ணதிர்ப்புள்ளநாளும், தமக்குத்தூய்மைபோதாத நாளும், எனஇந்நாள்கள் பார்ப்பார்வேதமோதாதநாள்கள். எ-று (௪௮)

கலியாணந்தேவர்பிதிர்விழா வேள்வியென், றைவகைநா
ளுமிகழாதறஞ்செய்க, பெய்கவிருந்திற்குங்கூழ் *

(இ-ள்) தான்செய்யுங் கல்லியாண நாளின்கண்ணும், தேவர்க்குச்சிறப்புநாளின்கண்ணும், பிதிர்களுக்குச்சிறப்புச்செய்யுநாளின்கண்ணும், விழாநாளின்கண்ணும், யாகஞ்செய்யுநாளின்கண்ணும், இகழாதேகொடையறஞ்செய்க. விருந்தினர்க்குஞ்சோறிடுக. எ-று (௪௯)

உடைநடைசொற்சோர்வுவைதலிந்நான்கு, நிலைமைக்குங்க
ல்விக்குமாண்மைக்குந்தத்தங், குடிமைக்குந்தக்கசெயல். *

(இ-ள்) உடையும், நடையும், சொற்சோர்வும், வைதலுமெனஇந்நான்கும், தாமரசனாற் சிறப்புறப் பெற்றமைக்கும், தம்மாண்மைக்கும், தங்கல்விக்கும், குடிப்பிறப்பிற்கும், தக்கதகுதியாகச் செய்க. எ - று (௫௰)

பழியாரிழியார் பலருள்ளுறங்கா,ரிசையாதநேர்ந்துகரவா,ரி
சைவின்றி, யில்லாரையெள்ளியிகழ்ந்துரையார்தள்ளியுந்,தா
ங்கருங்கேள்வியவர். *

(இ - ள்) பலர்நடுவணிருந்து பிறரைப்பழித்துரையார். இழித்துரையார். பலர்நடுவணுறங்கார். தமக்குச்செய்யப்பொருந்தாதவற்றைப்பிறர்க்குச்செய்கிறோமென்றுஉடம்பட்டுச்செய்யாதொழியார்தகுதியின்றிவறியாரைஇகழ்ந்துமுறைமைகடந்துரையார். பிறரான்மாறுபடற்கரியகேள்வியார்இறந்தும். எ-று (௫௧)

மின்னொளியும்வீழ்மீனும்வேசையர்கள்கோலமுந்,தம்மொ
ளிவேண்டுவார்நோக்கார், பகற்கிழவோன், முன்னொளியும்
பின்னொளியுமற்று. *

(இ - ள்) மின்னொளியையும், வீழ்மீனையும், வேசையர்கள்கோலத்தையும், தமதுவிளக்கத்தைவேண்டுவார்நோக்கார், பகற்கிழவோனு

---

௨ உறுகண் - துன்பம்

டையகாலை யொளிடையும், மாலை யொளியையும், அப்பெற்றியே நோக்கார். எ-று (ருஉ)

படிறும்பயனிலவும்பட்டியுரையும், வசையும்புறனுமுரையா
ரேயென்று, மசையாதவுள்ளத்தவர். *

(இ-ள்) வஞ்சனையுரையும், பயன்படாதவுரையும், வாய்காவாது வேண்டியவுரைக்குமுரையும், பிறரைப்பழியுரைக்குமுரையும், இவையாருஞ்சொல்லார் என்றுந்தளராதவுள்ளத்தவர். எ-று (ருங)

தெறியொடுகல்லேறுவீளைவிளியே, விகிர்தங்கதங்கரத்தல்
கைபுடைதோன்ற, லுறப்புச்செகுத்தலோடின்னவையெல்
லாம், பயிற்றார்நெறிப்பட்டவர். *

(இ-ள்) தெறித்தலும், கல்லெறிதலும், *வீளைசெய்தலும், அரப்போகின்றொருவனையழைத்தலும், ஒருவன்செய்கையும், சொன்முதலாயினவற்றைத் தானும் அவ்வகையிகழ்ந்து செய்துகாட்டலும், வேகமுடையனாதலும், ஒளித்தலும், கையொடுகைபுடைத்தலும், பிறர்க்குவெளிப்படக்கண்ணிடுதன்முதலாயினசெய்து தன்னுறப்பைச்செகுத்தலும், இப்பெற்றிப்பட்டவையெல்லாம் பயின்றுசெய்யார்வழிப்பட்டார். எ-று (ருச)

முறுவலினிதுரைகானீர் மணைபாய். கிடக்கையோடிவ்வைந்
துமென்பதலைச்சென்றார்க், கூணொடுசெய்யுஞ்சிறப்ப. *

(இ-ள்) முறுவலோடுகூடியவினிதுரையும், கால்கழுவநீரும், இருக்கமணையும், கிடக்கப்பாயும், கிடக்குமிடமுமென இவ்வைந்துமென்றுசொல்லுப. தம்மிடத்துச்சென்றார்க்குணவுடனேசெய்யுஞ்சிறப்புக்கள். எ-று (ருரு

கறுத்தபகைமுனையுங்கள்ளாட்டுக்கண்ணு, நிறுத்தமனமில்லா
ர்சேரியகத்துங், குணநோக்கிக்கொண்டவர்கோள்விட்டுழியு
நிகரிலறிவினார்வேண்டார்பலர்தொகு, நீர்க்கரையுநீடுநிலை. *

(இ-ள்) வெகுண்டபகைமுனையின்கண்ணும், கள்ளாற்களித்தாடுமிடத்தும், பொதுமகளிர்சேரிக்கண்ணும், தங்குணங்களையாராய்ந்துதம்மைவிரும்பிக்கொண்டார்கோட்பாடுவிட்டவிடத்தும், பலர்தொகுநீர்க்கரையிடத்தும், நெடிதாகநிற்கையை, ஒப்பில்லாதவறிவினையுடையார்விரும்பார். எ-று (ருசு)

முளிபுல்லுங்கானமுஞ் சேரார்தீக்கூட்டார், துளிவிழக்கால்
பரப்பியோடார், தெளிவிலாக், கானந்தமியரியங் கார்துனி
யஃகி, நல்குரவாற்றப்பெருகினுஞ்செய்யாரே, தொல்வரை
வித்தீர்ந்ததொழில். *

---

* வீளைசெய்தல், கனைத்தல்முதலியவைசெய்தல்

(இ-ள்) முற்றியபுல்லின்கண்ணும், முற்றியகாட்டின்கண்ணும் சேர்ந்திரார். அவற்றைத்தீக்குணவாகவூட்டார். மழைபெய்யாநிற்கக்காலைப்பரப்பியோடார். தேரூடியாதகாட்டுள் தமியராய்ப்போகார். மழைகுறைந்துபெய்யாதொழிதலால்வறுமைமிகப் பெரிதாயிற்றாயினுந் தங்குடியொழுக்கத்தை நீங்கிய தொழில்களைச் செய்யார் எ-று. (௫௭)

பார்ப்பனையுந்தேவகுலனுஞ்சுடுகாடு, மூரில்வழியெழுந்தவொ
ற்றைமுதுமரனுந், தாமேதமியர்புகாஅர்பகல்வளரார், நோயி
ன்மைவேண்டுபவர். *

(இ-ள்) குடியில்லாதமனையகத்தும், தேவாலயங்களுக்குள்ளும், சுடுகாட்டிக்குள்ளும், ஊரில்லாதவிடத்துளதாயினதனிமுதுமரத்தின்கண்ணும், அறிவின்றித்துணையோடல்லதுதாமேபோகார். பகலுறங்கார். நோயின்மைவேண்டுவார். எ-று (௫௮)

எழுச்சிக்கட்பிற் கூவார்தும்மார்வழுக்கியு, மெங்குற்றச்சே
றீரோவென்னூரே, முன்புக், கெதிர்முகமாநின்றுமுழையாரிரு
சார்வுங், கொள்வர்குரவர்வலம். *

(இ-ள்) பிறரெழுந்துபோகத்தொடங்கினபொழுது அவரைப்பின்னேநின்றழையார். அப்பொழுது தும்முவதுஞ்செய்யார். மறந்தும் எங்குப்போகிறீரென்று சொல்லார். முன்னேபுக்கெதிர்முகமாகநின்றும்ஒன்றைச்சொல்லார். அவர்க்கிருமருங்குநின்றுசொல்வார். தங்குரவர்போம்பொழுதுவலங்கொண்டுபோக- எ-று (௫௯)

உடம்புநன்றென்றுரையாருநார்விளக்கு, மடுப்பினுட்டீநந்த
க்கொள்ளாரதனைப், படக்காயார்தம்மேற்குறித்து. *

(இ-ள்) பிறரைப்பார்த்து உடம்புநன்றாயிருந்ததென்றுசொல்லார். விளக்கினையும்வாயாலூதியவியார். அட்டிலடுப்பின்கண்ணெருப்பவியச்செய்யார். அந்நெருப்பின்சுடர்தம்மேற்படக்குளிர்கெடக்காயார் எ-று (௬௰)

யாதொன்றுமேறார்செருப்புவெயின்மறையா, ரான்றவிந்த
மூத்த விழுமியார், தம்மோடங், கோராறுசெல்லுமிடத்து.

(இ-ள்) யாதொன்றுமேறிப்போகார். செருப்புத்தொடார். ஒன்றனுந்பிறர்தம்மேல்வெயின்மறைக்கப்போகார். ஆன்றவிந்தமூத்தவிழுமியார் தம்முடன்கூடவழிபோமிடத்து. எ-று (௬௧)

வான்முறையான்வந்ததான்மறையாளனை, மேன்முறைப்பா
ற்றங் குரவரைப்போலொழுக, னூன்முறையாளர்துணிவு.

(இ-ள்) வழிவழிமுறையான்வந்தநான் மறையாளனை,மேலாகியமுறைத் தன்மையையுடைய தங்குரவனைப் போற் கொண்டொழுகுதல்நூன்முறையாளர்துணிவு. எ-று (௬௨)

கால்வாய்த்தொழுவு சமய மெழுந்திருப், பாசாரமென்பர்
குரவர்க்கிவையிவை,சாரத்தாற்சொல்லியமூன்று. *

(இ ள்) காலின்கட்டொழுதலும், அவர் நன்றென்றசமயத்தின்கணிற்றலும்,அவரைக்கண்டாலெழுந்திருத்தலுமெனவிவைகுரவர்க்குச்செய்யுமாசாரமென்றுசொல்லுவர்நல்லார்- குரவர்க்குச்செய்யுமாசாரம் பலவற்றுள்ளும் சாரத்தாற் சொல்லப்பட்ட விம்மூன்றும்மையாம்.எ-று. (௬௩)

துறந்தாரைப்பேணலு நாணலுந் தாங்கற்ற, மறந்துங்குர
வர்முற்சொல்லாமைமூன்றுந், திறங்கண்டார் கண்டநெறி.

(இ-ள்)அருந்தவரைப்பாதுகாத்தலும்,பழிநாணலும்,தாங்கற்றவர்களைக்குரவர்முன் மறந் தாயினுஞ் சொல்லாமையு மெனஇம்மூன்றுந்திறப்படவறிந்தார் அறிந்தநெறி. எ-று (௬௪)

பார்ப்பார்தவரே சுமந்தார் பிணிப்பட்டார், மூத்தாரிளையார்
பசுப்பெண்டிரென்றிவர்கட், காற்றவழிவிலங்கினாரேபிறப்பி
டைப்,போற்றியெனப்படுவார். *

(இ-ள்) பார்ப்பாரும்,தவசியரும்,சுமந்தாரும்,பிணிப்பட்டாரும்,மூத்தாரும்,பிள்ளைகளும்,பசுக்களும், பெண்டிருமென்றுசொலலப்பட்டஇவர்க்கு மிகவும் வழிகொடுத்து விலங்கிப்போயினாரேதாம்பிறந்தபிறப்புத்தோறும்பிறராற் போற்றியென்று சொல்லப்படுவார் எ-று (௬௫)

ஈன்றாண்மகடன்னுடன்பிறந்தாளாயினுஞ், சான்றோர்தமித்தா
வுறையற்க,வைம்புலனும், தாங்கற்கரிதாகலான். *

(இ-ள்) தாயுடனாயினும், மகளுடனாயினும்,தம்முடன்பிறந்தாளுடனாயினும்,தனித்தாகவுறையார்ஐம்புலன்களையுந்தடுக்கவரிதாகலான் எ-று. (௬௬)

கடைவிலக்கிற்காயார் கழிகிழமைசெய்யார், கொடையளிக்க
ட்பொச்சாவார் கோலநோய்செய்யா, ரிடையறுத்துப்போகி
ப்பிறனொருவற்சேரார்,கடைபோகவாழ்துமென்பார் *

(இ-ள்)அரசர்வாயிலின்கட்டடையுண்டானுல்வெகுண்டுகாயார். அரசரோடுமிகக்கிழமையையவர்பொறாதவகைசெய்யார். தமக்கொன்றுதவுமிடத்தும், அவர்தம்மைத்தலையளிக்குமிடத்தும் தமக்கவையடையாவென்றிகழார்.அரசனொத்தக்கோலஞ்செய்யார்.அரசிருந்தவவையின்கணூடறுத்துப்போகார். பிறனொருவனைச் சேர்ந்திரார்.

முன்புபோலப்பின்கடைபோகவாழ்து மென்றுகருதுவார் எ-று()

தமக்குற்ற கட்டுரையுந்தம்மிற் பெரியா,ருரைத்த தற்குற்றவு
ரையு,மஃதன்றிப்பிறற்குற்றகட்டுரையுஞ் சொல்லற்கசொல்லி
ன்,வடுக்குற்றமாகிவிடும் *

(இ-ள்) தமக்குற்றகட்டுரைகளும்,தம்மிற்பெரியனுகஅரசனுற்சிறப்புப்பட்டாருரைத்தவுரைகளும், அஃதன்றியேபிறர்க்குறுதியாகியகட்டுரைகளும்,அரசர்க்குச்சொல்லற்க.சொல்லுவாராயிற் றமக்குவடுப்படுங்குற்றமாம் எ-று. (௬௮)

பெரியாருவப்பனதா முவவாரில்லஞ், சிறியாரைக்கொண்டுபு
காஅர்,அறிவறியாப்பிள்ளையேயாயினு நீத்துரையார்,தம்மோ,
டளவளாவில்லாவிடத்து. *

(இ-ள்) பெரியராயுள்ளாருவந்தனவற்றைத்தாமுவவார்.தம்மில்லத்தின்கட் கீழ்மக்களைக்கொண்டு புகார்.அறிவினை யறியாத பிள்ளையேயாயினு முயர்த்தன்றி யிழித்துச்சொல்லார். தம்மோடளவளாவில்லாதவிடத்து. எ-று. (௬௯)

முனியார்துனியார்முகத்தெதிர்நில்லார்,தனிமையிடத்துக்க
ட்டங்கருமஞ்சொல்லா, ரினியவையாமறிது மென்னார்/கசி
வின்று,காக்கைவெள்ளென்னுமெனின் *

(இ-ள்)அரசன்செய்வனவற்றைவெறார்.அவனோடுகலாயார். விலங்கவன்றிநேர்முகத் தெதிர்நில்லார்.அரசன் றனியேநின்றவிடத்தின்கட்டங்கருமஞ்சொல்லார்.இனியவான்பொருள்களையாங்கனுகர்ந்திலேமென் றரசற்குச்சொல்லார்.காக்கைவெள்ளென் றிருக்குமென் றரசன்சொல்லினுஞ்பினுமவன்மேல்அன்பின்றிவெறார்.எ-று(௭௰)

உமிவுமுயர்ந்துழியேறலும்பாக்கும், வகையிலுரையும் *
வளர்ச்சியுமைந்தும்,புணரார்பெரியாரகத்து *

(இ-ள்)உமிதலும்,உயர்ந்தவிடத்தேறியிருத்தலும்,பாக்குத்தின்னலும்,கூறுபாடில்லாதவுரையும்,உறங்குதலும்,இவ்வைந்தும்அரசர்முன்புசெய்யார்- எ-று (௭௧)

இறைவர்முற்செல்வமுங்கல்வியுந்தேசுங் குணனுங்குலமுடை
யார்கூறார்,பகைவர்போற்,பாரித்துப்பல்காற்பயின்று *

(இ-ள்)அரசர்முன்புதஞ்செல்வமும்,கல்வியும், தமதுவிளக்கமும்,குணனும், குடிப்பிறந்தார் தமக்குத் துன்பஞ்செய்யும் பகைவர்போற்பரப்பிப்பல்காற்புயின்றுரையார்.எ-று. (௭௨)

பெரியார்மனையகத்துந்தேவகுலத்தும்,வணங்கார்குரவரையு
ங்கண்டா,லணங்கொடு, நேர்பெரியார்செல்லுமிடத்து *

(இ-ள்) அரசர்மனையகத்தும், தேவாலயங்களுள்ளும், குரவரையுங் கண்டால்வணங்கார், தெய்வங்கள்புறம்போந் தெழுந்தருளுமிடத்தும், அரசர்புறம் போதுமிடத்துங்கண்டாலும், வணங்கார். எ-று.

நகையொடுகொட்டாவிகாறுமற்புத் தும்ம, லிவையும்பெரியா
ர்முற்செய்யாரே செய்யி, னசையா தநிற்கும்பழி. *

(இ-ள்) சிரிப்பும், கொட்டாவியும், காறியுமிதலும், தும்மலுமென விவையுமரசர்முன்பு செய்யார். செய்வராயினிற்கும் பழிகுறையாதே. எ-று. (௭௪)

நின்றக்காணிற்கவடக்கத்தாலென்று, மிருந்தக்காலேவாமை
யேனூர், பெருந்தக்கார், சொல்லிற்செவிகொடுத்துக்கேட்டி
டுகமீட்டும், வினுவற்கசொல்லொழிந்தக்கால் *

(இ-ள்) தன்மாணுக்கன் என்றும் ஆசிரியர்முன்னடங்கியொழுகவேண்டுதலின் அவர்பாடஞ்சொல்லுதலை நிறுத்தினல்தாமும்நிற்கக்கடவர். அவர்முன்னிருந்தபோது அவரொழுந்துபோவெனஏவுதற்குமுன்எழுந்துபோகார். அவர்பாடமுதலியவற்றைச்சொல்லிற் செவிதாழ்த்துக்கேட்டிடுக. அவர்யாதொன்றுஞ்சொல்லாவிடின்தாமும் வினவாதிருக்கக்கடவர்-எ-று, (௭௫)

உடுக்கையிகவார்செவிசொறண்டார்கைமே, லெடுத்துரையா
ர்பெண்டிர்மேனோக்கார், செவிச்சொல்லுங், கொள்ளார்பெரி
யாரகத்து *

(இ-ள்) பெரியாரவைக் களத்தில் ஆடையைக் களையார். காதைச்சொறியார். கைமேலெடுத்துப்பேசார். மாதர்களைநோக்கார். பிறர் தஞ்செவியிற்சொல்லுஞ்சொல்லையுங்கேளார்-எ-று. (௭௬)

விரைந்துரையார்மேன்மேலுரையார்பொய்யாய, பரந்துரை
யார்பாரித்துரையா, ரொருங்கெனைத்துஞ், சில்லெழுத்தினாலே
பொருளடங்கக்காலத்தாற், சொல்லுகசெவ்வியறிந்து *

(இ-ள்) கடுகியுரையார். மேன்மேலுரையார். பொய்யாய சொற்களைப்பரக்கவுரையார். தாமுரைக்கத்தக்கசொற்களைப் பரப்பியுரையார். கூடவெல்லா வெழுத்தினையும் சில்லெழுத்தினனே பொருள்விளங்கும்வகை காலத்தொடு படுத்தவன் செவ்வி யறிந்து சொல்லுக. எ-று, (௭௭)

தம்மேனிநோக்கார்தலையுளரார்கைற்தொடியா, ரொம்மேனி
யாயினுநோக்கார்தலைமகன், றன்மேனியல்லாற்பிற. *

(இ-ள்) தற்குலப்பெண்டிர் தங்கணவரது உடலின் வடிவத்தையன்றி ஏனை யாடவரதுமேனி எத்துணையழகுடையவேனும்பாரார்.

தம்முடலின் வடிவத்தையும் நோக்கார். தலைமயிரைக் கோதார். கைந்நொடித்தன்முதலியனசெய்யார்-எ-று- (எஅ)

பிறரொடுமந்திரங்கொள்ளா ரிறைவனைச்,சாரார் செவியோ
ரார் சாரிற்பிறிதொன்று,தேர்வார் போனிற்கதிரிந்து. *

(இ-ள்) பிறரொடுகூட விருந்தொன்றனை யாராயார். அரசனைச்சாரநில்லார். அரசன்பிறனொருவனுக்குச் சொல்லுஞ் சொல்லைத்தஞ் செவியாலோரார். ஒன்றனை ஆராய்வார் போல முகந்திரிந்து நிற்க-எ-று- (எகூ)

துன்பத்துட்டுன்புற்று வாழ்தலுமின்பத்து, ளின்பவகையா
னொழுகலு, மன்பிற், செறப்பட்டாரில்லம் புகாமையிம்மூ
ன்றுந், திறப்பட்டார்கண்ணேயுள. *

(இ-ள்) துன்பகாலத்தில் அத்துன்பத்துள்மைவுற்று வாழ்தலும், இன்பகாலத்திற் பிறர்க்கின்பு செய்யும்வகையா னின்புற்று நடத்தலும், அன்பினின்றும் வேறுபட்டாரில்லம் புகாமையுமாகிய இம்மூன்றும் ஒருதிறப்பட்டார்கண்ணேயுளவாம்-எ-று. (அ௰)

தெறுவத்துந்தங்குரவர்பேருரையாரில்லத், துறுமிநெடிது
மிராஅர் பெரியாரை, யென்றுமுறைகொண்டுகூறார்புலைய
ரையு, நன்கறிவார்கூறார்முறை. *

(இ-ள்) நன்கறிவார்-தாம்வெகுண்டாராயினும்தங்குரவர்பெயரைச்சொல்லார். தம்மில்லத்தின்கட்டம்மனையைமிகவுங்கழறியுரைத்து நெடிதிரார். தம்மிற்பெரியாரை முறைப்பெயர்கொண்டு சொல்லார். புலையரையுமுறைப்பெயர்கொண்டுகூறார்-எ-று. (அக)

புழைக்கடைப்பின்புகார் கோட்டியுரிமை,யிவற்றுக்கட் செ
வ்வியார்நோக்காரோ,யவ்வத்,தொழிற்குரியரல்லாதவர். *

(இ-ள்) பிறர்மனையின்கட் புழைக்கடைவாயிலாற்புகார், அரசன் கோட்டிகொண்டு கூத்துமுதலாயின வற்று ளின்புறு நின்றவிடத்தும், உரிமைமகளிரோ டிருந்தவிடத்தும், செவ்வியராயுள்ளார்சென்று நோக்கார்அந்தத் தொழிற்குரியரல்லாதார்-எ-று- (அஉ)

வண்ணமகளிரிடத்தொடுதம்மிட, மொள்ளியமென்பாரிடங்
கொள்ளார், தெள்ளி, மிகக்கிழமையுண்டெனினும்வேண்டா
வேபெண்டிர்க், குவப்பனவேறாய்விடும். *

(இ-ள்) அறிவுடையோரென்று சொல்லப்படுவோர் கோலஞ்செய்யு மகளிரிட்டுத்தோடு சேர்ந்ததம்மிடத்தைச் சிறந்த இடமாகக் கொள்ளார். தெளிவுற்று மிகுந்த வுரிமையுளதாயினும் விரும்பப்படுவனவல்ல. தம்மனைவியர்க்கு விரும்பப்படுவன வேறுபடுமாதலால். எ-று. (௮௩)

நிரல்படச்செல்லார்நிழன்மிதித்து நில்லா, ருரையிடைபாய்ந்துரையா ரூர்முனிவசெய்யா, ரரசர்படையளவுஞ்சொல்லாரேயென்றுங், கடைபோகவாழ்துமென்பார். *

(இ-ள்) ஒருவர்பக்கத்தில் வரிசைப்படப்போகார். ஒருவருடைய நிழலைமிதித்துநில்லார். முன்னராராய்ந்தன்றிப்பேசும்போதாராய்ச்சிசெய்துபேசார். ஊரிலுள்ளோர்வெறுக்கத்தக்கவைகளைச்செய்யார். அரசரதுபடையளவைப்பகைவர்க்குச்சொல்லார். எப்போதுமொருதன்மையராவாழ்துமென்பார்- எ-று. (௮௪)

அளையுறைபாம்புமரசுநெருப்பு, முழையுறைசீயமுமென்றிவைநான்கு, மிளையவெளியபயின்றனவென்றெண்ணி, யிகழினிழுக்கந்தரும். *

(இ-ள்) புற்றில்வாழரவும், அரசனும், தீயும், குகையில்வாழ்சிங்கமுமென்கின்றஇந்நான்கினையும், இளையனவென்றும், எளியனவென்றும், பழகினவையென்றும், எண்ணியிகழின்துன்பந் தருவனவாம்- எ-று. (௮௫)

அறத்தொடுகல்வியாண் டாள்வினைகூழா, யிறப்பப்பெருகியக்கண்ணும், திறப்பட்டார், மன்னரின்மேம்பட்ட செய்யற்கசெய்யின், மன்னியசெல்வங்கெடும். *

(இ-ள்) அறிவுடையோர்தம்மாட்டுச்செல்வமிகப்பெருகிய விடத்தும், அறத்தினையும், கல்வியாணத்தினையும், முயற்சியையும், விட்டினையும், அரசர்செய்வதினு மேம்படச் செய்யாதொழிக. செய்வாராயின் தம்மாட்டுற்றசெல்வங்கெடும்.எ-று. (௮௬)

உண்டதுகேளார்குரவரைமிக்காரைச், கண்டுழிக்கண்டான்மனந்திரியார்புல்லரையு, முண்டதுகேளாவிடல். *

(இ-ள்) ஐங்குரவரையும், சான்றோரையுங்கண்டால் மனம்வேறுபடாதவர்கள் அவரைநோக்கிநீவிருண்டதியாதெனவினவார். ஆதலாற்கீழோரையும் நீவிருண்டதுயாதென்றுவினவாதொழிக-எ-று

கிடந்தாரைக்கால்கழுவார் பூப்பெய்யார்சாந்து, மறந்தானு
மெஞ்ஞான்றும்பூசார்,கிடந்தார்க,ணில்லார்தாங்கட்டின்மிசை

(இ-ள்)எப்போதுங்கட்டிலின்மீது படுத்திருப்பவரது காலைக்கழுவார். அவருக்குப்பூப்புனையார். அவருக்குமறந்தாவது சந்தனம் பூசார். அருகில்நிற்றலுஞ்செய்யார். எ-று. (௮௮)

உதவிப்பயனுரையா ருண்டிபழியா, ரறத்தொடுதானோற்ற
நோன்புவியவார், திறத்துளிவாழ்துமென்பார். *

(இ-ள்) தாமொருவருக்குச்செய்தநன்றியின் பயனைச் சொல்லார். தமக்கொருவரிட்டஉணவை யிகழ்ந்துரையார். தான்செய்த அறத்தையும், விரதத்தையும், புகழ்ந்துரையார். பெரியோருடைய ஒழுக்கத்தினைநிலைத்திஅவ்வாறுவாழ்துமென்றெண்ணுவோர்.எ-று

எய்தாதவேண்டாரிரங்காரிகழ்ந்ததற்குக், கைவாரவந்தவிடுக்
கண்மனமழுங்கார், மெய்ப்பாயகாட்சியவர். *

(இ-ள்) தமக்குக்கிடைத்தற்கரியவற்றைவிரும்பார். தம்மா லிழக்கப்பட்டனவற்றிற்குவருந்தார். அகற்றற்கரிய இடுக்கணுற்றுழி அதற்குமனங்கலங்கார். உண்மையானஅறிவினை யுடையார். எ-று()

தலைக்கிட்டபூமேவார் மோந்தபூச்சூடார், பசுக்கொடுப்பிற்
பார்ப்பார் கைக்கொள்ளாரேயெனறும், புலைக்கெச்சி னீட்
டார்விடல். *

(இ-ள்) எப்போதும்ஒருவர்தலையில்முடித்த பூவைத்தாமுடியார் ஒருவர்மோந்தபூவையுஞ்சூடார். பிராமணர்பசுவினைக் கொடுத்தாலதனைவாங்கார். புலைபருக்கெச்சிலைக்கொடார். ஆதலால் இவைகளைவிடுக- எ-று. (௯௧)

மோட்டுடைப்போர்வையோடேக்கழுத்துந் தாளிசைப்புங்;
காட்டுளேயானும்பழித்தாரமாந்தம்மின், மூத்தவுளவாகலான்.

(இ-ள்) காட்டினிடத்திலேனும், தம்மூத்தோரு ளராயிருப்பராயின் அவர்முன்உடலின்மீது போர்த்தலும்,இறுமாந்திருத்தலும், இருதாளையுஞ்சேர்த்திணைத்திருத்தலும்,பழியினெல்லையாம்.எ-று

தலைஇயநற்கருமஞ் செய்யுங்காலென்றும், புலையர்வாய்நாட்
கேட்டுச் செய்யார், தொலைவில்லா, வந்தணர்வாய்ச் சொற்
கேட்டுச்செய்கவவர்வாய்ச்சொ,லென்றும்பிழைப்பதில, *

(இ-ள்) அறிவுடையோர்மேலான நற்கருமங்களைச் செய்யுமிடத்து எப்போதும்புலவரிடத்து நாட்கேட்டுச்செய்வார். கேடில்லாத அந்தணரிடத்து நாட்கேட்டே நற்கருமஞ்செய்க. அவர்வாய்ச் சொல்என்றும் பிழைபடுவனவல்லவாமாதலால். எ-று. (௩௩)

மன்றத்துநின் றுஞற்றார்மாசுதிமிர்ந்தியங்கார், என்றுங்கடுஞ்
சொலுரையாரிருவராய், நின்றுழிபுஞ்செல்லார்விடல். *

(இ-ள்) அறிஞர்சான்றோரவைக்களத்துயாதொரு அங்கசேட்டை யுஞ்செய்யார். மாசுள்ளனவற்றைத்திமிர்ந்துகொண்டுநடவார். எக் காலத்துங்கடுஞ்சொற்களுரையார். இருவராயிருந்துபேசுமிடத்து ப்போகார். ஆதலால் இவற்றையொழிக. எ-று. (௩௪)

கைசுட்டிக்கட்டுரையார் காண்மேலெழுத்திடார், மெட்சுட்டி
யிலலாரையுள்ளாரோ டொப்புரையார், கையிற் குரவர்கொ
டுப்பவிருந்தேலா,ரையமில்காட்சியவர். *

(இ-ள்) ஐயமற்றஅறிவுடையோர் தங்குரவர்முன்கையைச் சுட்டிக் காட்டிப்பேசார். காலின்மே லெழுதார். கல்விமுதலியவற்றையு டையாரோடு அவற்றை யில்லாரை மெய்யெனசாதித்து ஒப்பி ட்டுக்கூறார். குரவர்கொடுப்பதை உட்கார்ந்திருந்து ஏற்கார். எ-று.

தன்னுடம்புதார மடைக்கலந்தான்றன் னுயிர்க்கென்,றெண்
ணித்துவைத்த பொருளோடிவை நான்கும், பொன்னினைப்
போற்போற்றிக்காத்துய்க்கவுய்க்காக்கான், மன்னிய வேதந்
தரும். *

(இ-ள்) தன்னுடலும், மனைவியும், தன்னிடத்தில் அடைக்கலமாக ஒருவன் வைத்தபொருளும், தன் னுயிர்க்குதவியாக எண்ணிச்சேர்த்துவைத்தபொருளுமாகிய இந்நான்கினையும்பொன்னைப்போலக் காத்தொழுக. அவ்வாறொழுகாவிடத்து மிகுந்த துன்பத்தைத் தரும். எ-று. (௩௬)

நற்றெறும்பு தூங்கணம் புட்காக்கையென்றிவைபோற், றங்க
ருமநல்லகடைப்பிடித்துத், தங்கரும,மப்பெற்றியாகமுயல்ப
வர்க்காசார,மெப்பெற்றியானும்படும். *

(இ-ள்) ஆக்கமுள்ளஎறும்பும், தூக்கணம்பறவையும், காக்கையு மென்றுசொல்லப்பட்ட இவைகளின் செய்கைபோலநல்லனவாகிய தங்கருமத்தைச்சோராமற்கொண்டு கிடையாதகாலத்திற்குதவக் கிடைத்தகாலத்தில்உணவிற்குரியவற்றைச்சேர்த்தலும்,குளிர்காற்

றுமுதலியவற்றுவிடையூறுறுதவகையாகஇல்லமியற்றிக்கொள்ளு தலும், சுற்றத்தாரைவிளித்துண்கையுமாகிய இக்கருமங்களைச்செ ய்பவர்க்கு இல்வாழ்க்கையி னொழுக்கம் எத்தன்மையானுஞ் சிற ப்புறும். எ-று. (௧௭)

தொழுதானும் வாய்புதைத்தானு மஃதன்றிப், பெரியார்மு
ன்யாதுமுரையார்பழியவர், கண்ணுளேநோக்கியுரை. *

(இ-ள்) அறிஞர்பெரியார்முன்யாதேனு மொன்றுரைக்க வேண்டி ன் வணங்கிநின்றேனும், வாய்புதைத்துநின்றேனும், உரைப்பரே யன்றிவேறுவகையினுரையார். ஆதலால் நீ அவர்முன் குற்றம்யா துமுளவாகாமல் ஆராய்ந்துரைப்பாயாக. எ-று. (௧௮)

சூதர்கழக மரவமறுக்களம், பேதைகளல்லார் புகாஅர்புகுப
வேல், மேலதம்பலவுந்தரும். *

(இ-ள்) சூதாடுமிடத்தும், ஆரவாரம் நீங்காதவிடத்தும், அறியா மையை யுடைய ரல்லார்புகார். புகுவராயின் பலதுன்பங்களுமு ளவாம். எ-று. (௧௯)

உரற்களத்துமட்டிலும்பெண்டிர்கண்மேலு, நடுக்கற்றகாட்சி
யார்நோக்காரொடுதிசையா, ரில்லம்புகாஅர்விடல். *

(இ-ள்) சோர்வற்ற அறிவையுடையவர் ஆரவாரஞ் செய்யுமிடத்து ம், மடைப்பள்ளியிலும், பெண்டிர்களுறையிடத்தும், நோக்கார் எடுத்துரையார். இல்லத்துட்புகார். ஆதலால்நீவிடுக. எ-று. (௨௰)

அறியாததேசத்தானுதலன்மூத்தா, னிளையா னுயிரிழந்தா
னஞ்சினானுண்பா, னரசர்தொழிறலைவைத்தான் மணாளனெ
ன், றென்பதின்மர்கண்டீருரைக்குங்கால்மெய்யான், வாசா
ரம்வீடுபெற்றார்.

(இ-ள்) அறியாததேசத்தான், வறியோன், மூத்தோன், சிறுவ ன், உயிரிழந்தவன், பயமுற்றவன், உண்பவன், அரசர்தொழிலில் தலைவைத்தவன், மணமகன், என்னுமிவ்வொன்பதின்மரும், உண் மையாயுரைக்குமிடத்து ஆசாரமிலிகளாவார். எ-று. (௨௧)

ஆசாரக்கோவையுரை-முற்றிற்று.

முற்றும்.

உ




சிவமயம்.

# சிவக்கியானபோதனை.

ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராகியுஞ் சகலபுவன கர்த்தவாகியுஞ் சருவஜீவதயாபரராகியும் விளங்காநின்ற ஸ்ரீசாலிவாடீஸ்வரர்காந்திமதி யம்பாளுடைய கிருபா கடாட்சத்தினாலேயுண்டாகிய சகலாகமசாரசங்கிரக பூசாவிதானத்திற் பிறந்தவிதிப்படி தருமபுரத்து ஆதினம் பெரியபட்டம் திருஞானசம்பந்த சுவாமிகள் சீவகாருண்ணியத்தினால் கிருபையுடனெடுத்துக்காட்டியசிவக்கியானபோதனை.

சிவாலயத்தின் கர்ப்பகிரகத்தில் நித்திய பரமா யெழுந்தருளிய விந்துநாதமயமாம் பீடலிங்கத்தில் மூர்த்தி தத்துவப் பிரபாவ சொரூபமாகிய சகள நிட்கள பரசிவார்ச்சனைசெய்கிற கிரியையுங் கிரியாங்க நிருவாகளையுமவர்கள் நியதியு மவர்களுக் குரித்தாகிய கருவிகளுங் காலமுமிடமு முதலியவைகளைச்சுருதி சிவாகமங்களிற் பிறந்தவிதியின் பிரகாரம் நடப்பித்து நடந்தும் வருகிற தாவது கிழக்குமுகமா யெழுந்தருளிய மகாலிங்கத்தைப் பூசைசெய்யுஞ் சிவாசாரியர் கர்ப்பகிரகத்திலும் அர்த்தமண்டபத்திலுஞ் சம்புபாரிசமாகியுந்தென்பக்கமாகியுமிருக்கிறசுவாமிக்குவலதுபக்கத்திலிருந்து அர்ச்சனையபிஷேகம் நைவேத்தியஞ்சோடசோபசாரமுதலியவைகளுஞ் செய்துவருவதற்கு அந்தந்தச் சமயயுக்தமாகிய அபிஷேகத்திரவியம், பரிவட்டம், சந்தனம், புஷ்பம், நைவேத்தியம், தூபம், தீபமுதலானசோடசோபசார கர்ப்பூர பரியந்தமாகிறதற் கிடையிடையேகரசுத்திக்கு ஜலங்கொடுத்துவருகிறயாவையுஞ்சுவா

மிக்குவடபக்கமாகிய இடதுபாரிசத்தில் பரிசாரகர்களிருந்துகொ
டுத்து வருகிறது கிரமமென்றும் அந்த அர்த்த மண்டபத்திலே
யேஆசாரியருக்குக்கிழ்பக்கமாகவேதாத்தியயனபட்டரும் உபசா
ரத்துக்குபசாரந்தனித்தனியே வேதமந்திரங்களைச்சொல்லி வருகி
றதுகிரமமென்றும்அவர்களுக்குக்கிழ்பக்கமாகியபூசாத்துவாரசமீ
பத்தில்நந்திகேஸ்வரசுவாமிமுத்திரையாகியவேத்திரதாரியாம்கட்டி
யக்காரரிருந்துசுவாமியினுடையபிரதாபங்களையுமந்திரபுட்பமுத
லாவைகளையுஞ்சொல்லிவருகிறதுகிரமமென்றும்அந்தத்துவாரத்து
க்குவெளியில்மகாமண்டபத்தில்சம்புபாரிசமாகிறவலதுபாரிசத்தி
ல்சைவர்களில்திராவிடவேதஸ்தோத்திரத்துக்கு யோக்கியர்களாயி
ருக்கிறஓதுவார்மூர்த்திகள்சிவப்பிரீதிகரமாயிருக்கிறதேவாரமுதலா
னஸ்தோத்திரங்களையுஞ்செய்துவருகிறதுகிரமமென்றும் இவர்களு
க்குக்கிழக்கு நிருத்தமண்டபமத்தியில சுவாமிசந்நிதியில் சுத்தநிர்
த்தந்தாளம்வாத்தியங்கானம் இவைகளைவிதிப்பிரகாரம் - ருத்திரக
ணிகைமுதலானவர்களுஞ்செய்துவருகிறதுகிரமமென்றும்- வாத்தி
யமண்டபத்தில் தூரியாதி வாத்தியங்கள்சேரஷித்துவருகிறதுகிரம
மென்றும்சாமரைமயிலதொம்பைகுடைமுதலானஉபசாரக்கருவி
கள்பூசாத்துவாரவெளியில்உபயபாரிசத்திலும்உபசாரங்கள்செய்து
வருகிறதுகிரமமென்றும்தரிசனத்துக்காகவந்தசகலமானபேர்களு
ம்உபய பாரிசத்திலு மிருந்து தரிசித்து வருகிறது கிரமமென்றும்
இந்தப் பிரகார மிவர்கள் செய்யுங் கைங் கரியங்களை நடத்தி
வருகிறது கிரமமென்றும் பரமேஸ்வரன் சுப்பிரமணிய சுவாமி
முகநோக்கி அநுக்கிரகம் பண்ணினது - பின்னு மதிற் றுனே
சுப்பிரமணியசுவாமியின்முகநொக்கிஇந்தவிதிப்பிரகாரம்நடந்தா
ல் ராஜராச்சியங்களுக்குச்சுகமுண்டாகுமென்றும் பிறழ்ந்துநடந்
தால் ராஜராச்சியங்களுக்கு அரிஷ்டம்உண்டாகுமென்றும்பரமசிவ
ன்கட்டளையிட்டருளியது - இஃதன்றியும்நின்றசீர்நெடுமாறநாயனு
ர்காலத்தும் - வேதசிவாகம விதி வழுவாது நடப்புவித்தும் நடந்
தும் வருவனவுளவாதலால் அவைகளில் எதிலாவது சிறிதுகிரியா
லோபம்மந்திரலோபம்செய்தால்அவைசிவத்துரோகமென்றும் அ
ப்படித்தெரிந்துசெய்த சிவத்துரோகத்துக்குப்பிராயச்சித்தங்களி
ல்லாமலும்ஒருகாலும்விட்டேறுநரகமுண்டாகுமென்றும் வேதசி
வாகமங்கள்முறையிடுகின்றமையால் இத்துரோகங்களுக்குக்காரண
ராவோர் மகாபாதகராவர் இதற்கு வாக்கியம் " மாநிலங்காவலா
வான்மன்னுயிர்காக்குங்காலை - தானதனுக்கிடையூறு தன்னுற்றன்
பரிசனத்தால் - ஊனமிகுபகைத்திறத்தாற் கள்வராலுயிர்தம்மால்

ஆனபயமைந்துந்தீர்த்த றங்காப்பானல்லனோ,, இஃதன்றியுந்திரு
வாவடுதுறைஆதீனங் கனகசபாபதி தம்பிரான் வைக்கிலாகிய
சோமசுந்தரம்பிள்ளை முதலெழுதியதில் சிவாகமத்தைச் சார்ந்த
வைகளாக "தாபரசங்கமங்களென் றிரண் டுருவினின்று மாபன
பூசைகொண்டு மன்னுயிர்க்கருளை வைப்பன்,, என்றும் "குருவி
ங்கசங்கமத்தைக் கூத்தனுருவென்றே மருவுவதே நல்மருந்து,,
என்றும் "செறிதலாற்றிருவேடஞ் சிவனுருவேயாகுஞ் சிவோகம்
பாவிக்கு மதனாற்சிவனுமா,, மென்றும் "மாலறநேயமலிந்தவர்
வேடமும்ஆலயந்தானுமரனெனத்தொழுமே,, என்றும்-பத்தராதி
திருவேடத்தையுஞ்சிவால யத்தையும் பரமேசுவர னென்று வழிப
டுக வென்றும் எழுதிய வைகள் யாவு முண்மை தான் - இஃதன்
றியும்- ஷெ கனகசபைதம்பிரானுமவருடையவக்கில்முதலானவர்க
ளுமினிமேல்மைத்துக்கூறுகின்ற மகாவக்கியங்களைக்கவனிக்காமலி
ருப்பதும், பெரியோரிடத்தில்விசாரணைசெய்யாமலிருப்பதுமெ
த்தன்மைத்தெனின்ஒருசிலந்திப்பூச்சியானதுதான் செய்வதே சிவ
நேசமென்று நினைத்துதிருவானைக்காவினில்ஒருயானையைக் கொன்
றுவிட்டசரித்திரம்போன்றது. பரம்பரையாயுள்ளஞானாசிரியரிடத்
தில் உபதேசம்பெற்று ஐயறிவோடுங்கூடி மெய்யறிவைக்காணவ
ந்தவர்களாகையால் இவர்களப்படிச்செய்வதழகல்ல "மன்னுவான்ம
றைகளோதிமனத்தினுள்விளக்கொன்றேற்றி - யுன்னுவாருள்ளத்து
ள்ளனொற்றியூருடையகோவே,, என்றபடிசிந்தித்துணர்க.
"எள்ளப்படுகீழ் மக்களேனு மிழிந்த குலத்தோ ராயினும் - வள்
ளற்பரமன்றிருநீறு மணியுமணிந்தமாண்பினரை - யுள்ளத்துள்ளே
யெப்போதுமுணர்ந்து தெருண்டு சிவமெனவே - கொள்ளத்தக்க
வறிவின்றோ பிறவிக்கடலிற் குளியாதார்,, என்றும் "எவரேனுந்
தாமாகவிலாடத்திட்ட திருநீறுஞ் சாதனமுங்கண்டாலுள்கி-யுவரா
தேயவரவரைக் கண்டபோது முவந்தடிமைத்திற நினைந்தங்குவந்
துநோக்கி, அவர் தேவரிவர் தேவரென்று சொல்லியிரண்டா
ட்டாதொழிந்தீசன் றிறமேபேணிக், கவராதேதொழுமடியார்நெஞ்
சினுள்ளேகன்றுப்பூர்நடுதறியைக்காணலாமே,, என்றும் "பத்தராய்
ப்பணிவார்களெல்லார்க்குமடியேன்பரமனையேபாடுவா ரடியார்க்கு
மடியேன் சித்தத்தைச்சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்றிருவா
ரூர்ப்பிறந்தார்க ளெல்லார்க்குமடியேன் முப்பொழுதுந் திருமேனி
தீண்டுவார்க்கடியேன்முழுநீறு பூசியமுனிவர்க்குமடியேனப்பாலு
மடிசார்ந்த வடியார்க்கு மடியேனாரூர னாரூரிலம் மானுக்காளே
என்றும்- மகாவாக்கியங்கள் பிறந்தமையாலகுருலிங்கசங்கமமென்

னுமுப்பொருளு மெய்ப்பொருளாகக்கொள்ளுவ தன்மையாதலா ல்-விபூதி-ருத்திராட்சம்-சடை-கல்லாடை-சிவலிங்கம்-என்னும்இ வ்வைவகைமுத்திரையும்-விபூதி-ருத்திராட்சம்-சடை-சிவலிங்கம்-எ ன்னும்இந்நான்குவகைமுத்திரையும்-விபூதி-ருத்திராட்சம்-சிவலி ங்கம்-என்னும் இம்மூன்று வகை முத்திரையும்-விபூதி-ருத்திரா ட்சம் என்னும் இவ்விரண்டுவகைமுத்திரையும்-விபூதிதரித்தவர்களு ம்“அங்கமெலாங்குறைந்தழுகு தொழுநோயராயாவுரித்துத்தின்று ழலும்புலையரேனுங், கங்கைவார்சடைக்கரந்தார்க் கன்பராகிலவர்க ணன்றேர்யாம்வணங்குங்கடவுளாரே,, என்றும், ஓதியமெய்யன்புடை யவர்களு மிவ்வகையுள்ளவர்கள் யாவர்களுஞ் சிவசொரூபமேயன் றி வேறல்லவோ.-அப்படியானவாக்கியங்களைத் திருவுளத்திலேகொ ண்டருளியெழுந்தருளியநமதுபரமாசாரியராகியமெய்கண்டசிவா சாரியசுவாமிகள் அருளிச்செய்தசிவஞானபோதவிருத்திசச்சூத்திரத் தில் மேலேகண்டபடி-மாலறநேயமலிந்தவர்வேடமு-மென்ற மையால் வாக்குமனோதீதனா தருளு நாதீதமாம் நேயத்தழுந்தி னவர்களது திருவேடமே சிறப்புடையதாயிற்று. நேயமலிந்தவ ரென்பதனால்-ஞாதுருஞானம் ஞேயமென்னுந் திரிபுடி ஞே ந மூமாகிய காண்பானுங் காட்சியுங் காண்டலையும் நீத்தவர்க ளாத லால் அந்நிலையிற்றிளைத்த அனுபூதிமான்கள் “நேயங்கடந்தநிராதி சையானந்தவெள்ளங்காயம் விழுமுன்னொரு நாட்காண்பேனோசி ன்மயமே,, “தத்துவாதீதந்தனையடைந்த நாயன்மாரத்துவாக்குள் ளேயடங்குவரோசின்மயமே,, என்றும் “தோன்றும் பொழுதெல் லாஞ் சுகவடிவே தோன்றுதற்குத் தோன்றும்பெருமான்றன் சொ ல்லாமேசொன்னவா,, “வேறுநினையாமல்வீட்டின்பத்திற்புறந்தோயா தியிருந்தருந்தவண்ணமேதந்தருளே,, என்றும் “அல்லார்பொழிற் காழியம்பலவன்றன்வார்த்தை,யெல்லாஞ்சிவமாயிருந்ததே,தொல் லாழி,வெள்ளம்பரந்தற்றால் வேறுபுனலொன்றுபோலுள்ளஞ்சிவத் தேயொளித்து,, என்றும் “தாகமறந்துசதிர்மறந்துதான்மறந்து, தேகமறந்தட்டமாசித்திமறந்,தாகத்தில், வந்ததறியாதிருந்துமாறு ச்சிவானந்தஞ்,சந்ததம்வாழ்வார்க்கார்சரி,, “அறிவாயறிவிழப்பிலா கின்றவின்பச், செறிவாயச்சுகமாயத்தினமும்-பிறியா, திருந்தங்கதீ தமர்யேய்ந்தசிவானந்தம்,பொருந்துவார் முத்தரெல்லாம்போய்,, சுட்டறிவுகெட்டசுகாதீதவண்மையிலே,விட்டகலாதென்றும்விரவு வோ,ரட்டமாம், யோகசமாதிகளு முட்புறம்பாம் பூசைகளு,மா கதினையாரவர்,, என்றும் “குறிப்பிடங் காலந்திக் காசனங் குலங் கு ணஞ்சீர்-சிறப்புறு விரதஞ்சீலதபஞ்செபந்தியானமெல்லா,மறுத்த

றவொழிதல் செய்தல்மருவிடார்மன் றுசெய்தி,புறக்குறுபவர்போ
ல்வாய்மை யொழிந்தவையொழிந்து போமே,, "தீங்குறு மாயை
சேரா வகைவிளை திருவிதத்தா, னீங்கிட நீங்காமல நிலையிருளாய
நேயத்,தோங்குணர்வகத்தடக்கியுளத் துளின்பொடுக்கநேரோ, து
ங்குவர்தாங்கியேகத் தொன்மையிற்றுகளிலோ,,என்றும்"தொ
ண்டர்களிடத்துறவானேர்தொழுந்திருமேனிதானுமண்டருங்கண்
டிலாதவண்ணலேயெனவணங்கி, வெண்டரளங்கள்சிந்தவிழிமொழி
குழறமெய்யே,கண்டுகொண்டிருப்பர்ஞானக்கடலமுதருந்தினோ
என்றும்"ஓராமேதயொன்றையுமுற்றுன்னுமே நீமுந்திப்,,பாராமே
பார்த்ததனைப்பார்,, "கண்டபடியேகண்டுகாணுமைகாணுமற்,கொ
ண்டபடியேகொண்டிரு,,"ஒண்பொருட்கணுற்றூர்க்குறுபயனேய
ல்லாதுகண்படுப்போர்கைப்பொருள்போற்காண்,,ஓங்குணர்வினு
ள்ளடங்கியுள்ளத்திலின்பொடுங்கித்,தூங்குவர்மற்றேதுண்டுசொல்,,
என்றும்- உறங்கினேன்கைப்பொருள்போல்-என்றும்-துரியங்கடந்
தவித்தொண்டர்க்குச் சாக்கிரத்துரியமாய்நின்றதென் றுந்தீபற- எ
ன்றும்- பேசாமைபேறதனிற் பேசாமைகண்டவரைப் பேசாமை
செய்யும் பெரும்பெருமான் பேசாமை யென்னென் றும்வண்ண
மிருக்கின்றயோகிகள்பாலுண்ணின் றும்போகனுளன்,,என்றும் "அ
றிவுறிவாய்நிற்கி னறிவுபலவாமென்றறிவினறிவவிழ்த்துக்கொண்ட
வறிவினராய்வாழ்ந்திருப்பர்நீத்தவர்கள் மானிடரில்மாணவகதாழ்ந்
தமணிநாவேபோற்றும் - என்றும் - பரஞானத்தாற் பரத்தைத்த
ரிசித்தார் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள்பாரார் பார்க்கவரு
ஞானம்பலஞானம் ஞானம்விகற்பம் வாச்சியவாசகஞானம் வயிந்த
வத்தின் கலக்கந்தருஞானம் போகஞானதருஞான ஞேயத்தங்கிய
ஞானஞ்சங்கரவினைஞானமாகுந்திருஞான மிவையெல்லாங்கடந்தசி
வஞான மாதலாற் சீவமுத்தர் சிவமேகண்டிருப்பர். நீயச்சிவமாய்
நிராவிடையருணிகட்சிதன்மையாய்மூன்னிலையுணாக்கில் அகிலமுஞ்
சிவமாய்த் தோன்றல் மேவியபடர்க்கைசொல்லில் விளம்பிய விர
ண்டுமொன்றாய் நெய்வானந்தாதீத நினைவிலா நினைவா டன்றே
யான்செய் தேன்பிறர்செய்தா ரென்னதியானென்னு மிக்கோணை
ஞானவெரியால் வெதுப்பிநிமிர்த்துத்தான் செவ்வே நின்றிடவத்த
த்துவன்று னேர்தனையளித்து மூன்னிற்கும் வினை யொழித்திட்
டோடும்யான்செய்தேனெனு! மவர்க்குத்தாணிக்கின்றி நண்ணிவிக்
கும்போகத்தைப் பண்ணிவிக்குங்கன்மமுன் செய்யாஞானக்கூறி
ட்பினல்லாலொருவருக்கும் யானெனதென்றொழியாதன்றே - என்
றும் - யானெனதென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்குயர்ந்த

உலகம்புகும். தலைப்பட்டார்தீரத்துறந்தார் மயக்கிவலைப் பட்டார்
மற்றையவர். பற்றற்றகண்ணே பிறப்பறுக்குமற்று நிலையாமைகா
ணப்படும். கற்றீண்டுமெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டுவாரா நெறி. அற்றவரென்பா ரவாவற்றார்மற்றையாரற்று
கவற்றதிலர். அவாவிலார்க்கில்லாகுந் துன்பமஃ துண்டேல்தவாஅது
மேன்மேல்வரும். ஒருமையுளாமைபோ லைந்தடக்க லாற்றினெழு
மையுமேமாப்புடைத்து - என்றும் - அந்தக்கரணமடங்கத் துறப்
பதுவேவெந்தத் துறவிலுநன் றெந்தாய் பராபரமே அளவிலாப்
பாவகத்தாலமுக்குண்டிங்கறிவின்றிப்பறவீட்டிருந் துணருநின்ன
டியார்பந்தவந்தறுத்தா ரவர்பலரும்,, என்றும் - இவைகளுமி
வைதன்றிவிரியமாகிய வின்னுமனேக விதமாகிய சாஸ்திரங்களின் அ
னுபூதிப்பிரமாணம் விரித்துரைப்பின்ஐயமாதிமுக்குற்றமுந்திருப
டிஞானமும் நால்வகைக்காட்சியும் பொதுஞானமுங் கடந்து தற்
போதங்கெட சிவப்பேறுகப் பரசிவானந்தமேலீடாம் வாழ்வுற்
றஅதிவர்ணாசிரமஞானவான்கள் சகசவுல்லாச நிலைபெற்றவர்களாயி
ருக்கவும் சாப னுக்கிரககர்த்தத்துவமுள்ளவர்களாகவிருக்குமவர்க
ள்தெய்வத்தன்மைகளை யுணர்த்துவதாவது,, பாலைநெய்தல்பாடிய
தும் பாம்பொழியப்பாடியதுங், காலனையன்றேவிக் கராங்கொண்
ட,பாலன்,மரணந்தவிர்த்ததுவுமற்றவர்க்குநந்தங், கரணம்போலல்
லாமைநாண். ஓடஞ்சிவிகைவுலவாக்கி ழியளிக்கப்-பாடல்பனைபாலை
நெய்த-லேடெரிவைப் பென்புக்குயிர்கொடுத்தலீங்கிவை தானே
ங்குபுகழ்- தென்புகலிவேந்தன்செயல்,, என்றும்- இத்தன்மைத்தா
கிய சர்வபரிபூரணானந்தநிறை விற்றிளைத்த திருவுள மகிட்சியால்
திருவாய்மலர்ந்தருளிய தமிழ்வேதமாகிய திருத்தேவாரத்தி னுண்
மையைப் பரம்பரை சேஷாசார்த்தராயுஞ் சர்வபரித்திராயு மிரு
ந்து முத்தமிழாகிய இயலிசை நாடகத்தையுஞ் சத்திசமேதராம்
பேதாபேதசிவத்துவமான பூதபதார்த்தத்தையுஞ் சகள
நிட்களபரசிவ சொரூப சுபாவங்களை அன்பறிவுதேற்றமுற்றதிரு
வருளேகண்ணாகவிருந்து ஓதும் அவர்களுடைய பிரபல பெரும்
பாக்கிய செல்வத்தைத் தேர்ந்துணருமாயின் அவைகள் அளவை
க்கடங்காதவையாயிருக்கின்றன இஃதன்றியும் பத்தி மார்க்கத்தின்
சரியை கிரியைஒழுக்கத்தவர்கள்செய்கை “ஆதியையர்ச்சித்தார்க்க
ங்கழுமங்கங்கை-தீதில்திறம்பலவுஞ் செய்தனவும்-வேதியனே-நல்
வினையாமின்றநமக்குமெளிதாம்வற்றை- மெல்வினையேயென்றது
ராம்வேறு,, என்றமைபால். அந்தரியாகம் பகரியாகமாகிய சிவா
ர்ச்சனைக்குபயோகமாகிய வுபகரணங்களும் பூதசுத்தி முதலபஞ்

சசுத்தியுமிலியாங்கம் போகாங்கம்பூசை அபிஷேகம் நைவேத்தி
யஞ் சோடசோபசாரமு மிவைகளுக்கங்கமாகிய சரியைத் தொழி
ல்முதலியவும் அனுஷ்டித்துவருகிற அனுபூதியர்கள் பிரமாணம்
சிவகோசரியார் கண்ணப்பநாயனார் சண்டேசுரநாயனார் மார்க்கண்
டேயர்முதலியோரும் "இயக்கர்கின்னரர்ஞமனெனும்வருணனியங்கு
தீவளிநாயறுதிங்கள்-மயக்கமில்புலிவானரர்நாகம்வசுக்கள்வானவர்
தானவரெல்லா-மயர்ப்பொன்றின்றிநின்றிருவடியதனையர்ச்சித்தார்
பெறுமாருள்கண்டு- திகைப்பொன் றின்றிநின் திருவடி யடை
ந்தேன்செழும்பொழிற்திருப்புன்கூருளானே,, இருநிலத்தாரின்பு
ற்றங்கேத்து மடியின்புற்று ரிட்ட பூவேறுமடி - என்றும்- புன்பு
லாலியாக்கை புரைபுரைகனியப்பொன்னெடுங்கோயிலாய்ப்புகுந்
தெனென்பெலாமுருக்கியெளியையையாண்டயீசனேமாசிலாமணி
யே-என்றும்-சிந்தையேகோயில்கொண்டவெம்பெருமான்-என்று
ம்-மனமலிலிங்கமென்றும்தெள்ளித்தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்க
மென்றும் அந்தரியாகத்தானே முத்திசாதனமா யறைந்திடுவரது
தானும்- என்றும் - தம்மிற்சிவலிங்கங் கண்டதனைத் தாம்வணங்கி
என்றும் - இன்னும்பலபிரமாணங்களால் காணலாம் இஃதன்றியும்
வைராகத் தன்மை யுடைய வர்களுடைய செய்கை கல்விற்கம
ரிற்கதிர்வாளிற் சாணையினில் வல்லுப்பலகையினில் வாதனை யைச்
சொல்லிலக மார்க்கத்தாலவர்கள் மாற்றினர்களையா சக மார்க்கத்
தாலன்றேதான்,, என்றும் • பின்னும்இவ்வாக்கியங்களினுள்ளுறை
யாகிய வைராகத்தன்மையி னின்றவர்கள் சிறுத்தொண்ட நாய
னார் திருக்குறிப்புத்தொண்டநாயனார் அரிவாட்டநாயனார் கோட்
புலிநாயனார் மூர்த்திநாயனார் இவர்களுக்கு லிங்கோற்பவ ராயும்
விடபாரூடராயுஞ் சிவம் பிரத்தியட்சமாகிப் புருஷார்த்தத் தன்
மையடைந்தவர்க ளாதலானும் இத்தன்மையாம் பத்திவைராகம்
ஞானம் இம்மூவகையொழுக்க மொழுகிய நாயன்மார்களுக்குஞ்
சிவன்பிரத்தியட்சமாக வெழுந்தருள அச்சிவப்பேறு பெற்றார்க
ளென்பதும் இதனாற்றீரவிளங்குதலால் இந்நாயன்மார்கள் நாலு
வருணத்திலும் நாலாசிரமத்திலு மற்றுமுள்ளவர்களாயும் ஐவகை
வேடத்திலவரவர்களுக்குரித்தாகிய வேடத்தைத் தரித்தவர்களாயுமி
ருந்தவர்களாதலால் இவர்களைப்பொதுப்பட சிவசாரூபமா
கத்தரிசிப்பதுவே சர்வசம்மதமான சிறப்புப் பொருந்தியதெ
ன்பதே இவ்வாக்கியப் பிரமாணங்களாற்றேர்ந்து நிச்சயிப்பதாவ
து ஆதலால் சிவாலயத்தில் சிவதரிசனார்த்தமாகத் தரிசனகாலத்தி
ல்வந்தவர்கள் குலதனவித்தைகளாலு யர்வுதாழ்வும் வலியவெளிய

ரென்பதுமில்லாதுவெகுவித கூட்டங்களி லிரண்டுபோரிசத்திலுந்த
ரிசனம் பண்ணுவர்களாக விருக்கிற நெருக்கத்தில் வேத்திரப்ப
டையால் விலக்கப்பட்டு மதனுற்றண்டிக்சப்பட்டு மதனுலொது
க்கப்பட்டும்அவரவர்களுக்குண்டானகாட்சியேதரிசனமாதலாலிவர்
களிலொருவருக்காவது இடம் நியமமில்லை யென்பது நிச்
சியிக்கலாகிறது இதற்கு செல்வநல்குரவின்றிவிண்ணோர்புழுப்புல்
வரீம் பின்றியார்க்கு மரும்பொருள்,,என்றும்-பிரமாணிக்கிறபடி
யால் இவர்களை யாதொரு சங்கற்பமு மில்லையென்று நிச்சயக்க
லாயிருக்கிறது இஃதன்றியுந்தோடுடையசெவியனென்றுசிறப்பி
த்தருளியபடியால் இவ்வாக்கியத்தைச்சீகாழியின்கண்ணெழுந்தரு
ளியிருக்கின்ற சுவாமி திருத்தோணியப்பாருடையஇடது திருச்
செவியினிடமாகக் கருணைகூர்ந்து கேட்டருள வேண்டுவ தாகச்
சொல்விய தென்று சொல்லுவதை வசனார்த்தமாகத் தேர்ந்தவிட
த்து அக்காலத்தில் திருநிலையம்மன் பொற்கின்னத்திலளித்தருளி
யதிருமுலைப்பாலைத் திருஞானசம்பந்தசுவாமிதிருவாய்மடுத்துண்ட
ருளியதில் மார்பகத்திலுந் திருவாயிலும் பெருகிவழிந்
தபாலின் குறிகளை அந்தச் சுவாமிகளுக்கு அப்பராகிய சிவபா
தவிரதையர்கண்டையுற்றுவினுவ அவரையந் தெளிவதற்காகவும்
அத்தெய்வத் தன்மை யுற்ற தெய்வீ கங்களைத் தேசோ விலாச
மாகப் பிரகாசித்து சர்வபத்தசனங்களு மன்புகூர்ந்து பத்திசெய்
துஇஷ்டப்பிராப்த்தியடைவதற்காகவும்பரசிவாநந்த அம்புராசியி
ற்றிளைத்துஅகண்டாகார நிறைவாகிய வாழ்வுற்றதிருவுளமகிட்சியா
ல்சுவாமி தோணியப்பார் திருமேனியின் பிரத்தியாங்கத்தையும்
உபாங்கங்களையுஞ் சுட்டுதலாகச்சுட்டிச் சிறப்புவைத்துக் காட்டிய
தேயன்றி இவ்வாக்கியத்தைச்சுவாமி திருத்தோணியப் பாரிடதுதி
ருச்செவியினிடமாய்த் திருவுளமகிட்சியாகக்கேட்டருளியதன்றெ
னறுதிரநிச்சயக்கலாகவிருக்கின்றது.

சிவக்கியானபோதனை

முற்றும்.

உ

சிவமயம்.

சைவசமயசந்திரோதயம்-என்னும்-வினாவிடை

அச்சுப்பதிப்பதைக்குறித்த

# அறிக்கைபத்திரிகை.

திருஞானசம்பந்தசுவாமிகள் முதலான சமயாசாரியர்களாலும் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட சிவாசாரியார் முதலானசந்தானாசாரியர்களாலு மருளிச்செய்யப்பட்ட தேவாரம் திருவாசகமென்னுந் திருநெறித்தமிழ்வேதமும் சிவஞானபோதமுதலான சைவசமயசித்தாந்த சாஸ்திரங்களும் பரமசிவத்தினுண்மையையும் சரியையாதி நான்குபாதமுதலான சைவசமயாசாரகிரமங்களையெல்லாந் தெளிவாகச் சொல்லுமேயானாலும் அவைகளெல்லாம் பாடல்களாயிருப்பதினாலும் வெளிதின் விளங்குவ தருமையாயிருப்பதைப்பற்றி மேற்கண்ட வேதசாஸ்திரங்களிற் சொல்லியிருக்கும் சைவசமயத்துக்குரிய கிரமங்களைப் பெரியோர்களால் சொஞ்சந்தெரிந்துக்கொண்டு வசனகாவியமாகச்செய்து அச்சுப்பதிப்பித்து விளம்பரப்படுத்தினா லதைவாசிப்பவர்களுக்குச்சமையத்தின கோட்பாடுஇத்தன்மையதென்று தெரிவது பத்திசிரத்தையுண்டாகிப் புறச்சமையபோதனைக்குச் செவிகொடாமல் நல்வழியிருக்கக் கல்வழியிற் சென்று வருந்தவேண்டுவதேனென்று முறுதிப்பாட்டுடன் பெரியோர்களை யடுத்துத்தொண்டுசெய்வது மன்றிக்காலந்தோறுஞ் சிவாலயத்திற்சென்று சிவதரிசனஞ் செய்து சரியை கிரியை யோகமென்னு மூன்றுபாதமு மனுஷ்டித்து ஞானமார்க்கத்தை யடைவதற்கு ஏதுவாயிருக்குமென்று அச்சுப்பதிப்பிக்கத் தொடங்கியிருக்கிறோம்.

இனிபதிப்பிக்கும்புத்தகங்கள்.

திருச்சிற்றம்பலக்கோவையாருரை.

அறுபத்துமூன்றுநாயன்மார்சரித்திரவசனம்.

இங்ஙனம்

திருநெல்வேலிநெல்லையம்பலத்தில்

சைவசமயசப்பிரசங்கவூழியன்

சதுரங்கப்பட்டணம்

**சதாசிவமுதலியார்.**